www.padippakam.com

மாணவர் – இளைஞர்

# முன்னோடி

12–6, 13–1,2,3
ஜூலை 99 – பிப்ரவரி 2000

நன்கொடை : ரூ. 4.00





தோழா!
தருமபுரி மண்ணில்
நீ சிந்திய குருதி

நாளை தமிழகத்தை
சிவக்கச் செய்வது
உறுதி!

இதோ!
உன் வழியில் நாங்களும்...



படிப்பகம்

www.padippakam.com

# சியாட்டில் போராட்டம் :
# எரிமலையாய் வெடித்த ஏகாதிபத்திய எதிர்ப்பு போர்!

அமெரிக்காவில் உள்ள சியாட்டில் நகரத்தில் அண்மையில் நடந்த உலக வணிக அமைப்பின் (WTO) மாநாடு தோல்வியில் முடிவுற்றது. உலகிலுள்ள அனைத்து உழைக்கும் மக்களையும் சுரண்டிக் கொழுக்கும் ஏகாதிபத்தியங்கள், தங்களது கொடூர சுரண்டல் நடவடிக்கைக்காக நடத்திய இம்மாநாட்டை ஆயிரக்கணக்கில் திரண்ட மக்கள் முறியடித்ததின் மூலம் ஏகாதிபத்தியங்களின் முகத்தில் கரிபூசிவிட்டனர்.



மாநாட்டை கலங்கடித்த மக்கள் வெள்ளம்

கொள்ளை இலாப வெறிக்காக உலகையே தங்கள் கீழே கொண்டு வந்து மேலும் மேலும் கொழுக்க முனையும் ஏகாதிபத்தியங்களின் நலன்களுக்காக அமைக்கப்பட்டதே உலக வணிக அமைப்பு (WTO), ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு அமைக்கப்பட்ட இதில், இந்தியா உட்பட 135 நாடுகள் அந்தந்த நாட்டு மக்களின் எதிர்ப்பையும் மீறி இணைந்துள்ளன.

ஏற்கனவே, கடந்த 20 ஆண்டுகளுக்கும் மேலாக, உலக வங்கி, சர்வதேச செலாவணி நிதியம் (IMF) போன்ற ஏகாதிபத்திய நிதி நிறுவனங்களின் கிடுக்குப் பிடியில் இந்தியா முதலான பல மூன்றாம் உலக நாடுகள் சிக்கித் தவிப்பது போதாதென்று, இவ்வமைப்பை ஏகாதிபத்தியங்கள் அமைத்தன.

இதன் விளைவாய், உலக மக்கள் தங்களின் பொருளாதார அரசியல் உரிமைகளை இழந்தனர். பெயரளவிற்கு இருந்த நாடாளுமன்றம், அரசியல் சட்டம் முதலியவை செயலற்றதாகின. உலக ஏகபோக முதலாளிகளுக்கு சேவை செய்யும் உலக வணிக அமைப்பே இறுதி அதிகாரம் கொண்டதாக ஆகியது.

இதை எதிர்த்து போராட்டங்கள் பகுதி-நாடு அளவில் நடந்து உலக அளவில் நடைபெறத் துவங்கியது. இறுதியாக, சியாட்டிலில் இப்போராட்டங்களின் வீச்சு வெளிப்பட்டது.

உலக வணிக அமைப்பின் நேரடி கட்டுப்பாட்டில் இல்லாத ஜவுளி, சுற்றுப்புறச்சூழல், தொழிலாளர் சட்டங்கள் போன்ற துறைகளை தங்களின் இலாபத்திற்கு ஏற்றவிதத்தில் நேரடி ஆதிக்கம் செய்ய ஏகாதிபத்தியவாதிகளினால் கூட்டப்பட்டதே இம்மாநாடு. கடந்த ஒரு ஆண்டாகவே அமெரிக்காவில் இப்போராட்டத்திற்கான தயாரிப்பு பல்வேறு தளங்களில் - வடிவங்களில் நடத்தப்பட்டது. பிற நாடுகளிலிருந்தும் கூட தொழிலாளர்கள் இந்த போராட்டங்களில் பங்கேற்றனர். முதன்மையாக அமெரிக்க தொழிலாளர்கள் அதிக அளவில் தீவிரமாக இதில் செயற்பட்டனர். தவிர, சுற்றுப்புறச் சூழல் மற்றும் மனித உரிமை அமைப்புகளைச் சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

மாநட்டின் தொடக்க நாளன்றே போராட்ட செயற்வீரர்கள் மாநாட்டு அரங்கத்தை முற்றுகையிட்டனர். அரங்கத்திற்கு செல்வதற்கான அனைத்து வழிகளையும் சுற்றி வளைத்துக் கொண்டனர். ஒரு புறம், மனிதச் சங்கிலி அமைத்தும், மறுபுறம் நிறைய தடையரண்களை அமைத்தும் சியாட்டில் நகரத்தின் பெரும்பகுதியை தங்களது கட்டுப்பாட்டில் கொண்டுவந்தனர்.

மாநாட்டின் பிரதிநிதிகள் (முரசொலி உட்பட்ட தரகர்கள்) தாங்கள் தங்கியிருந்த இடங்களைவிட்டு வெளியே வரவில்லை.

போராட்டத்தை ஒடுக்க ஈடுபடுத்தப்பட்ட போலீசோடு நேரடியாக மோதினர் போராளிகள். முந்தைய நாளின் இரவிலிருந்தே அது துவங்கியது. போலீஸ் மிளகு புகையை பரப்பியும் இரப்பர் குண்டுகளை கொண்டு சுட்டும் போராட்டத்தை கட்டுப்படுத்த முயன்றது. ஆயினும், அது நிறைவேறாததால் நகர நிர்வாகம் அவசரநிலையை பிரகடனம் செய்தது. அடுத்து, மாநாட்டின் தொடக்க அமர்வு நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டது.

அன்று பிற்பகல் 2 மணி அளவில் தொடங்கியிருக்க வேண்டிய அமர்வை கூட தள்ளிவைக்க, நேருமளவிற்கு நகரமெங்கும் போராட்டமயம்.

பின்னர், கண்ணீர் புகையை வீசி தடியடி செய்து போராட்டத்தில் ஈடுபட்டோரை பல மணி நேர கடும் முயற்சிக்கு பின்னரே போலீசால் கைது செய்ய இயன்றது.

உலக வணிக அமைப்பை, 'உலக பயங்கரவாதிகள் அமைப்பு, உலக அடிமை அமைப்பு, இரத்தத்தை உறிஞ்சும் கசடு, நான் சாப்பிடும் உணவை உலக வணிக அமைப்பு அழிக்கிறது' என்றும் 'வாழ்வின் அனைத்தையும் முதலாளியம் அழிக்கிறது' என்றும் பலவாறாக முழக்கமிட்டனர் போராளிகள்.

(11-ம் பக்கம் பார்க்க)



படிப்பகம்

www.padippakam.com

போராட்டமே
வாழ்வின் விதி!



மாணவர் – இளைஞர்
**முன்னோடி**
முற்போக்கு மாணவர்
இளைஞர் இதழ்

12-6, 13-1, 2, 3
ஜூலை 99 – பிப்ரவரி 2000

தனி இதழ் : ரூ. 4.00
ஆண்டு சந்தா : ரூ. 36.00

ஆசிரியர்
மற்றும்
வெளியீட்டாளர்

**பாலன்**
33/16, இராணி அண்ணாநகர்,
கே. கே. நகர்,
சென்னை – 78.

# விடுதலைக்கு உயிர் தந்த உழைக்கும் மக்களின் தவப்புதல்வன் தியாகி தோழர். இரவீந்தருக்கு வீரவணக்கம்!

கடந்த சனவரி 10ஆம் நாள் மாலை நாளிதழ்களிலும், 11ஆம் தேதி காலை நாளிதழ்களிலும் தருமபுரியில் போலிசுடன் மோதலில் நக்சலைட் சுட்டுக்கொலை என்ற செய்தி தலைப்புச் செய்தியாக பரபரப்பாக வெளியானது. தருமபுரியில் கைது செய்யப்பட்ட மூன்று நக்சலைட்டுகளை விசாரணைக்காக கொண்டு செல்லும் போது, தப்பிச் செல்ல முயன்றதாகவும், அப்பொழுது காவல்துறையினர் சுட்டதில் இரவீந்தர் இறந்து விட்டதாகவும், சிவா என்பவர் மாட்டிக் கொண்டதாகவும், மற்றொருவர் தப்பிவிட்டதாகவும் ஒரு நாளிதழ் செய்தி கூறுகிறது. அதே வேளை வேறு சில நாளிதழ்கள் காவல்துறையினர் அதிரடிபடையினருடன் சேர்ந்து நக்சலைட்டுகளை பிடிக்கச் சென்ற போது நக்சலைட்டுகள் துப்பாக்கியால் சுட்டதாகவும், பதிலுக்கு சுட்டதில் இரவீந்தர் கொல்லப்பட்டதாகவும், சிவா மாட்டிக் கொண்டதாகவும், இருவர் தப்பியோடி விட்டதாகவும் தெரிவிக்கின்றன. இவை போன்ற பலவிதமான முரண்பட்ட செய்திகள் பல்வேறு நாளிதழ்களில் வெளியாயின. ஜூனியர் விகடனோ எல்லா வற்றிற்கும் ஒரு படிமேலாக, 'ஆப்ரேஷன் தருமபுரி' என பெயரிட்டு காவல்துறையினர் நடத்திய தேடுதல் வேட்டையின் போது பெருங்காடு கிராம மக்களின் ஒத்துழைப்புடன் நக்சலைட்டுகளை சுற்றி வளைத்ததாகவும், அப்போது நடந்த மோதலில் இரவீந்தர் கொல்லப்பட்டதாகவும், சிவா சிக்கிக் கொண்டதாகவும், இருவர் தப்பிவிட்டதாகவும், இன்னும் பல `அதி அற்புத' தகவல்களுடன் சேர்த்து தனக்கே உரிய பாணியில் நல்ல `திரைக்கதை' எழுதியுள்ளது. உண்மையில் நடந்தது என்ன?

## காக்கிசட்டை கோழைகளால் நடத்தப்பட்ட போலி மோதல் படுகொலை!

சனவரி 6ஆம் நாளன்று மாலை பெருங்காடு பள்ளம் கிராமத்தில் தோழர்கள் இரவீந்தர், சிவா, இராமச்சந்திரன், பழனிச்சாமி ஆகியோர் புரட்சிகர அரசியலை பிரச்சாரம் செய்து விட்டு இரவு அங்கேயே தங்கியுள்ளனர். 7ஆம் நாள் காலை 11.30 மணியளவில் ஒரு வீட்டில் உணவருந்திக் கொண்டிருந்த போது, கருங்காலிகள் கண்ணையன், மாதையன் மற்றும் கியூ பிரிவு போலீஸ் மடத்து வேலு ஆகியோரின் உதவியுடன் தோழர்கள் இரவீந்தர் மற்றும் சிவாவை கைது செய்துள்ளனர். இரு தோழர்களின் கண்களையும், கைகளையும் கட்டி மூன்று நாட்கள் கொடூரமாக சித்தரவதை செய்துள்ளனர். (காக்கிசட்டை வெறிநாய்கள் செய்த சித்தரவதைக்கான அடையாளங்கள் தோழர். இரவீந்தரின் உடல் முழுவதும் காணப்பட்டன.) சனவரி 10ஆம் நாள் காலை இருதோழர்களின் கண்களையும் கைகளையும் கட்டி பெருங்காடு பள்ளம் அருகே உள்ள காட்டுப் பகுதிக்குக் கொண்டு சென்று தோழர் சிவா கையில் துப்பாக்கியை கொடுத்து தோழர் இரவீந்தரை சுடுமாறு கூறியுள்ளன கியூ பிரிவு நாய்கள். தோழர் சிவா மறுத்தவுடன் இருவரையும் ஓடுமாறு கூறியுள்ளனர். ஆனால் ஓட மறுத்த தோழர்கள், மார்பில் சுடுமாறு காக்கிசட்டை கோழைகளின் துப்பார்க்கிகளுக்கு முன் மார்பை நிமிர்த்தினர். அதன் பின்னர் தோழர் சிவாவின் எதிரிலேயே தோழர். இரவீந்தரை சுட்டுக் கொன்று விட்டு, தோழர் சிவாவை 11ஆம் நாளன்று மாலை மாஜிஸ்திரேட் முன்னர் ஆஜர் படுத்தியுள்ளது `பெருமை மிகு' தமிழக காவல்துறை. நக்சலைட்டுகளை பிடிக்கச் சென்ற போது ஏற்பட்ட `மோதலில்' தற்காப்புக்காக சுட்டதில் தோழர். இரவீந்தர் கொல்லப்பட்டதாக கதை புனைந்தது. தோழர். இரவீந்தரை கட்டி வைத்து சுட்டதற்காக காக்கிச்சட்டை 'மாவீரர்' களுக்கு ரூ.20,000/– பரிசு வழங்கியுள்ளார் ஐ.ஜி.சுப்பையா. நிராயுத பாணியை கை களைக் கட்டிச் சுட்டுக் கொன்றுவிட்டு, தங்களது `மோதல்' நாடகத்தை வீராவேசமாக பேட்டியளிக்கின்றனர் எஸ்.பி.கந்தசாமி மற்றும் அதிரடிபடை தலைவர் பாலச் சந்திரன்.

இப்பச்சைப் படுகொலையின் மூலம் கோழைத்தனத்தில் தாங்கள் தேவாரத்தின் வாரிசுகள் என்பதை கந்தசாமியும், பாலச்சந்திரனும் நிரூபித்துவிட்டனர். இப்போலி மோதல் படுகொலையை திட்டமிட்டு அரங்கேற்றியுள்ளனர் இக்கோழைகள். சனவரி 7ஆம் நாள் காலையே தோழர்களை கைது செய்துவிட்டு `நக்சலைட்டுகள் இரயில் நிலையத்தை தகர்க்க சதி,' 'காவல் நிலையத்தை தகர்க்கப் போவதாக மிரட்டல்', 'அரசியல் தலைவர்களை கடத்த சதி' போன்ற செய்திகளை 7ஆம் நாள் முதல் 10ஆம்



படிப்பகம்

www.padippakam.com

நாள் வரை திட்டமிட்டு வெளியிட்டு வந்தனர். `உள்ளதை உள்ளபடி கூறும்`(?) முதலாளிய பத்திரிக்கைகள் எவ்வித ஆய்வுமின்றி காவல்துறை வழங்கிய செய்திகளை வழங்கிய படியே வெளியிட்டன. சில பத்திரிக்கைகளில் குறிப்பாக தோழர். இரவீந்தர் தலைமையில் நக்சலைட்டுகள் செயல் பட்டுவருவதாகவும், அவரை பிடிக்க காவல்துறை முயன்று வருவதாகவும் கூட செய்திகள் வெளியாயின. இப்படியாக தோழர். இரவீந்தரின் படுகொலைக்குத் தேவையான தெளிவான அடித்தளத்தை உருவாக்கிக் கொண்டு சனவரி 10அன்று நரவேட்டையை நடத்தியுள்ளது காவல்துறை.

காவல் நிலைய கற்பழிப்புகள், லாக் அப் படுகொலைகள் போன்றவற்றில் இந்தியாவிலேயே முன்னணியில் நிற்பதைப் போல `போலி மோதல் படுகொலைகளிலும்' நீண்ட பாரம்பரியம் கொண்டவர்கள் தான் தமிழக காவல்துறை யினர். 1970இல் இ.க.க (மா.லெ)யின் மத்தியக் குழு உறுப்பினரும், தமிழக செயலாளரும் ஆன தோழர். அப்பு காக்கிச் சட்டை வெறியர்களால் கைது செய்யப்பட்டு இரகசியமாக படுகொலை செய்யப்பட்டார். இதில் வேடிக்கை என்னவெனில் இன்னும் தோழர். அப்பு வைத் தேடி வருவதாகக் கூறிவருகிறது காவல் துறை. 1977இல் வடஆற் காட்டில் இளஞ்சிங்கம் சீராளனைக் கைது செய்து படுகொலை செய்தது காவல்துறை. 1980இல் தருமபுரியில் உழைக்கும் மக்களின் தலைவன் தோழர்பாலனை பொதுக்கூட்ட மேடையில் கைது செய்து, அடித்துக் கொன்றான் கோழை தேவாரம். தோழர். கண்ணாமணியைக் கைது செய்து கொடூரமாக சித்திரவதை செய்து கொலை செய்தான் தேவாரம். மேலும் 26 தோழர்களை கைது செய்து சுட்டுக் கொன்றான். தோழர். தமிழரசனை பொன்பரப்பியில் பொதுமக்கள் போர்வையில் ஒளிந்து கொண்டு படுகொலை செய்தனர் காவல்துறை யினர். இதே வரிசையில் இப்பொழுது உழைக்கும் மக்களின் தவப்புதல்வன் தோழர். இரவீந்தரையும் படுகொலை செய்துள்ளது கோழை கந்தசாமி கும்பல்.

**நரவேட்டைக்கான பின்னணி**

கடந்த 1999 டிசம்பர் 2ஆம் நாளன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) மக்கள் யுத்தத்தின் மையக்குழு உறுப்பினர்களான தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி ஆகியோரை ஆந்திர காவல்துறையினர் போலி மோதலில் படுகொலை செய்ததைக் கண்டித்து தருமபுரி மாவட்டத்தில் மக்கள் யுத்தக்கட்சியால் இரு பேருந்துகள் கொளுத்தப்பட்டன. இதைக் காரணமாகக் காட்டித்தான் தோழர். இரவீந்தரை பச்சைப் படுகொலை செய்துள்ளனர் காக்கிச்சட்டைக் கோழைகள். பஸ் எரிப்புக்காக சுட்டுக் கொல்வதென்றால் கருணாநிதி, ஜெயலலிதா, இராமதாஸ், வை.கோ., மூப்பனார் உள்ளிட்ட ஓட்டுக்கட்சித் தலைவர்கள் தான் முதலில் சுட்டுக் கொல்லப்பட வேண்டும். உண்மையில் பஸ் எரிப்பு சம்பவமானது காவல் துறையினரால் காட்டப்படும் பொய்யான காரணமாகும். இன்று தருமபுரியில் தழைத்தோங்கி வரும் புரட்சிகர இயக்கத்தை வேரோடு அழிப்பதற்கான ஆட்சியாளர்களின் முயற்சியின் ஓர் அங்கமே இப்போலி மோதல் படுகொலை.

ஆளும் வர்க்கங்களின் கொடூர சுரண்டலினால் வறுமை யின் கோரப்பிடியில் சிக்கித் தவிக்கும் கோடானுகோடி உழைக்கும் மக்கள் புரட்சிகர இயக்கத்தில் அணிதிரண்டு வருகின்றனர். குறிப்பாக தருமபுரி மாவட்டத்தில் நிலபிரபுக் களாலும், கந்துவட்டி கயவர்களாலும், வனத்துறை அதிகாரி களாலும் கசக்கிப் பிழி யப்படும் உழைக்கும் மக்கள் தங்களது விடு தலைக்கான பாதை யைக் காட்டும் நக்சல் பாரி இயக்கத்தின் பின் னால் அணிதிரண்டு போராடி வருகின்றனர். 1980ல் கோழை தேவாரம் நடத்திய நரவேட்டையையும் எதிர் கொண்டு வளர்ந்து வந்து புரட்சிகர இயக் கம் இன்று வேரூன்றி வருகிறது. நிலத்துக் கான போராட்டம், சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான போராட்டம், வனத்துறை அதிகாரிகளுக்கு எதிரான போராட்டம் என எண்ணற்ற போராட்டங்களை புரட்சிகர இயக்கத்தினர் துணையுடன் முன்னெடுத்து வருகின்றனர் உழைக்கும் மக்கள். வளர்ந்து வரும் மக்கள் போராட்டங்களைக் கண்டு கிலிபிடித்துப் போயுள்ளனர் ஆளும் வர்க்கத்தினர். இதனால் எப்பாடுபட்டாவது புரட்சிகர இயக்கத்தை ஒழித்து விடத்துடிக் கின்றனர். தோழர். இரவீந்தர் போன்ற புரட்சியாளர்களைக் கொன்று விடுவதன் மூலம் மக்கள் போராட்டங்களை ஒடுக்கி விடலாம் என மனப்பால் குடிக்கின்றனர்.



மக்கள் விடுதலைக்கு உயிர் ஈந்த தியாகி தோழர். இரவீந்தர்

**உழைக்கும் மக்கள் விடுதலைக்கு வாழ்வை அர்ப்பணித்த தியாகி தோழர். இரவீந்தர்.**

**தோழர். இரவீந்தர்** - எந்த வழியிலாவது பணம் சம்பாதிக்கவும் பிறரைக் கீழே தள்ளிவிட்டு மேலே சென்றிடவும், தன் நலத்தை மட்டுமே பார்த்திடவும் கற்றுத்தரும் இன்றைய சீரழிவான சமூகத்தில், உழைக்கும் மக்களின் விடுதலைக்காக தனது வாழ்வையும், உயிரையும் அர்ப்பணித்த, பொதுநலனுக்காக தன்னலத்தை துறக்கவும் சமூகத்திற்கு கற்றுத் தந்த தியாகி. தொலைதொடர்புத் துறையில் .பொறியாளராக பணியாற்றிய இரவீந்தர், பணிபுரிந்த காலத்திலேயே பல போராட்டங்களை முன்



படிப்பகம்

www.padippakam.com

னெடுத்துள்ளார். தொலைபேசித்துறை தொழிற்சங்கத்தில் தலைமைப் பொறுப்பேற்று இடஒதுக்கீடு, ஊழியர்களின் கோரிக்கைகள் உள்ளிட்ட பல்வேறு போராட்டங்களை நடத்தினார். 1989இல் முழுநேர புரட்சியாளரான பின்னர், மண்டல் ஆதரவு, கூடங்குளம் அணுஉலை எதிர்ப்பு, வளைகுடா போர் எதிர்ப்பு உள்ளிட்ட பல போராட்டங்களில் முக்கிய பங்காற்றினார். 1991 முதல் தொழிலாளர்கள் மத்தியில் புரட்சிகர பணியாற்றி வந்தார். 1993இல் கிராமபுறத்தில் புரட்சிகர இயக்கத்தை கட்டியமைப்பதற்காக தருமபுரி மாவட்டத்திற்குச் சென்றார். தருமபுரி மாவட்டத்தில் நிலபிரபுகளுக்கு எதிரான போராட்டங்கள், வனத்துறை அதிகாரிகளின் அராஜகங்களுக்கு எதிரான போராட்டங்கள், கருங்காலி மாதையனின் நில ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டம், பள்ளிகளில் பெற்றோர் ஆசிரியர் கழகங்களின் கட்டாய நன்கொடைக்கு எதிரான போராட்டங்கள், இலவச வேட்டி சேலை விநியோக முறைகேடுகளுக்கு எதிரான போராட்டம் என பல போராட்டங்களை மக்களைத் திரட்டி முன்னெடுத்தார். இதனால் உழைக்கும் மக்களால் தங்களது தவப்புதல்வனாக ஏற்றுக் கொள்ளப்பட்டார். அதே வேளையில் ஆளும் வர்க்ககங்களுக்கோ முதன்மை எதிரியாகவும் ஆனார். தோழரை எப்பாடு பட்டாவது கொன்று விட காக்கிச்சட்டை கயவர்கள் துடித்தனர். இதற்காக, கிராமபுறத்தில் இரவீந்தரை சுட்டுக் கொன்றால் 45,000/-ரூபாய் தருவதாகவும், அவரது உணவில் மயக்க மருந்து கலந்து பிடித்துக் கொடுத்தால் சன்மானம் போன்ற செய்திகளை பரப்பியது கியூ பிரிவு காவல்துறை. அது பலிக்காததால் கியூ பிரிவு மடத்து வேலுவின் மூலம் கருங்காலி மாதையனுக்கு பணத்தையும், துப்பாக்கியையும் கொடுத்து தோழரை சுட்டுக் கொல்ல ஏற்பாடு செய்தனர். மாதையன் தோழரை சுட்ட பொழுது மயிரிழையில் உயிர் தப்பினார். இறுதியில் திட்டமிட்டபடி தோழரை கைது செய்து கோழைத்தனமாக படுகொலை செய்து விட்டனர்.

தோழர். இரவீந்தர் மேல் தட்டில் பிறந்தும், மக்களின் விடுதலைக்காக தனது சுகபோக வாழ்க்கையை உதறித் தள்ளிவிட்டு புரட்சிகர வாழ்க்கையை மேற்கொண்டார். தனது துணைவியாரையும், மகனையும் வருடத்திற்கு ஒரு முறைகூட பார்க்க முடியாமல் போகும் சூழ்நிலையிலும் புரட்சிப்பணிக்காக குடும்ப வாழ்வை அர்ப்பணித்தார். எளிமையாக வாழ்வதிலும், கடினமான வேலைகளை மேற்கொள்வதிலும் பிறருக்கு முன்னுதாரணமாக திகழ்ந்தார். உழைக்கும் மக்கள் விடுதலை என்ற இலட்சியத்தை நோக்கிய பயணத்தில் இம்மியளவும் தளராமல் புரட்சிகர பணியை உறுதியுடன் முன்கொண்டு சென்றார். காக்கிசட்டை கோழைகள் கொடும் சித்தரவதை செய்த போதும், போல்ஷ்விக் உறுதியுடன் எதிர்கொண்டதோடு, துப்பாக்கி முனைக்கெதிராக தனது மார்பை நிமிர்த்தி புரட்சி பாரம் பரியத்தை உயர்த்திப் பிடித்தார். இம்மாவீரன் கோழைகளின் தோட்டாவை மார்பில் ஏந்தி இவ்வுலகை விட்டு மறைந் தாலும், உழைக்கும் மக்களின் மனங்களில் நிலை பெற்று விட்டார். இரவீந்தரின் தியாகத்தின் மூலம், மக்கள் மத்தியிலிருந்து ஆயிரமாயிரம் இரவீந்தர்கள் உதித்தெழுவார் கள். அதனை கந்தசாமிகளாலும், பாலச்சந்திரன்களாலும் தடுத்து நிறுத்த முடியாது.

## கொடுங்கோலன் கருணாநிதி அரசின் பாசிச பயங்கரவாதத்தை முறியடிப்போம்!

ஊழல்ராணி ஜெயாவின் ஊழல்களை பட்டியலிட்டுக் காட்டியே ஆட்சிக் கட்டிலேறிய மாமா கருணாநிதி, மருமகன் முரசொலி கும்பல் ஏகாதிபத்திய எடுபிடிதனத்தில் பிற தரகர்களுடன் போட்டி போட்டுக்கொண்டிருக்கிறது. ஃபோர்டு, ஹுண்டாய் உள்ளிட்ட எண்ணற்ற அன்னிய நிறுவனங்களை அனுமதித்து தமிழகத்தையே ஏகாதிபத்தியங்களின் வேட்டைக்காடாக்கி விட்டது. கருணாநிதி அரசு பொதுத்துறை நிறுவனங்கள் அனைத்தையும் தனியார் மயமாக்கி வருகிறது. பஸ்கட்டண உயர்வு, மின்கட்டண உயர்வு, அத்தியாவசிய பொருட்கள் விலை உயர்வு என உழைக்கும் மக்களை வயிற்றி லடித்து வருகிறது. ஏகாதிபத்திய எடுபிடி வேலைகளுக்கு வசதியாக மருமகன் முரசொலியை தொழிற்துறை அமைச்சராக்கி, அன்னிய சேவையை சிறப்பாக செய்து வருகிறார் கருணாநிதி. தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்குவதில் ஆதிக்கசாதி ஆளும் வர்க்கங்களுடன் கைகோர்த்துக் கொண்டு, உலா வருகிறார். இவற்றிற்கு எதிராக குரல் கொடுப்போரையும், விடுதலைக்காக போராடுவோரையும் காவல்துறை துணை கொண்டு ஒடுக்கி வருகிறார். காவல்துறை நடத்தும் படுகொலைகள் அன்றாடச் செய்தியாகிவிட்டது. கோவையில் சிறுபான்மையினரை கொன்று குவித்து, இந்துமத வெறியர்களுக்கு சாமரம் வீசிய கருணாநிதி, நெல்லையில் மாஞ்சோலை தொழிலாளர்களை கொன்று குவித்து, ஆளும் வர்க்கத்துடன் கூடிக் குலாவினார். சிறையில் நிராயுத பாணியான அப்பாவி கைதிகளை கொடூரமாக கொன்று குவித்தது கருணாநிதி அரசு. எதிர்ப்புகுரல்களை பாசிச ஒடுக்குமுறையின் மூலம் ஒடுக்கிவிடத்துடிக்கின்றார் பாசிஸ்ட் கருணாநிதி. அத்தகைய பாசிச ஒடுக்குமுறையின் ஒரு பகுதியே துவங்கப்பட்டுள்ள நரவேட்டை. தோழர். இரவீந்தரைக் கொன்று விட்டு, எண்ணற்ற தோழர்களையும், இளைஞர்களையும் சிறைக் கொட்டடியில் அடைத்துள்ளது கருணாநிதி அரசு. தருமபுரி மாவட்டம் மற்றும் சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதிகளில் காவல்துறையினர் குவிக்கப்பட்டுள்ளனர். கிராமம் கிராமமாக 'தேடுதல் வேட்டை' என்ற பெயரில் அப்பாவி மக்கள் அச்சுறுத்தப் படுகின்றனர். இரவீந்தர் படுகொலை விஷயத்தில் தலையிட்டதற்காக மனித உரிமை ஆர்வலர்களும், தோழர்களை பிணையில் எடுக்கச் செல்லும் வழக்கறிஞர் களும் கூட மிரட்டப்படுகின்றனர். இத்தகைய பாசிச ஒடுக்குமுறையின் மூலம் புரட்சிகர இயக்கத்தை ஒடுக்கி விடத்துடிக்கும் கருணாநிதிக்கு நாம் நினைவுறுத்துவது, **ஒடுக்குமுறை என்றும் வென்றதில்லை. ஒரு இரவீந்தரை அல்ல, எத்தனை புரட்சியாளர்களை கொன்று குவித்தாலும், மக்களிடம் நிலை கொண்டு விட்ட புரட்சிகர இயக்கத்தை ஒழிக்க முடியாது. அதே வேளையில் வரலாற்றில் பாசிச ஹிட்லரையும், முசோலினியையும் போல, தாங்கள் செய்யும் ஒவ்வொரு கொலைகளுக்கும், நாளை மக்கள் மன்றத்தில் கருணாநிதியும், கந்தசாமியும் பதில் சொல்லியே தீர வேண்டும். இன்று தருமபுரியில் இரவீந்தர் சிந்திய இரத்தம் நாளை தமிழகத்தை சிவப்பாக்கும்.**



படிப்பகம்

www.padippakam.com

## உழைக்கும் மக்கள் விடுதலைக்காக இரத்தம் சிந்திய தோழர். இரவீந்தரின் இறுதி ஊர்வலம்

தோழர். இரவீந்தரை கொடூரமாக சித்திரவதை செய்து படுகொலை செய்த கோழை கந்தசாமி கும்பல், தோழர் மறைந்த செய்தியைக் கூட அவரது துணைவியாருக்குத் தெரிவிக்கவில்லை. மாறாக ஆந்திராவில் சட்டக்கல்லூரி பேராசிரியையாக உள்ள தோழர். இரவீந்தரின் துணைவியாரை ஆந்திராவில் தலைமறைவாக உள்ள தீவிரவாதி என்று பொய்யான செய்தியை பத்திரிக்கைகள் மூலம் பரப்பினர் காக்கிச் சட்டைக் கயவர்கள். (கந்தசாமியின் அகராதியில் சட்டக்கல்லூரி பேராசிரியர் என்றால் தீவிரவாதி என்று அர்த்தம் போலும்!). தோழர். இரவீந்தரின் உடலை தருமபுரியில் வைத்திருந்தால், மக்கள் கொதித்தெழுந்து திரண்டு விடுவார்கள் என அஞ்சி நடுங்கிய காவல்துறை, தோழரின் உடலை அவசர அவசரமாக பிரேத பரிசோதனை நடத்தி, சேலம் மருத்துவமனைக்கு அனுப்பியது. (புரட்சியாளனின் இறந்த உடலைக் கண்டுகூட கிலிபிடித்து நடுங்கும் சூராதிசூரர்கள் தான் தேவாரம், கந்தசாமி வகையறாக்கள்). இதற்கிடையே தோழர் இரவீந்தர் சித்திரவதை செய்யப்பட்டுள்ளதால் மறு பிரேதபரிசோதனை கோரி தோழரின் துணைவியார் உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தார். அதன் படி மறு பிரேதபரிசோதனைக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. தோழரின் இறுதி ஊர்வலம் மக்கள் பங்கேற்போடு எழுச்சிகரமாக நடந்து விடாமல் தடுப்பதற்காக காக்கிசட்டை கயவர்கள் மறுபிரேத பரிசோதனையை திட்டமிட்டு தாமதப்படுத்தினர். சனவரி 13ஆம் நாள் மாலையே தோழரின் உடல் சென்னை மருத்துவமனைக்கு கொண்டு வரப்பட்டும், மறுநாள் மதியம் தான் மருத்துவர்கள் பிரேத பரிசோதனையை துவங்குமாறு செய்தனர். மருத்துவமனை முழுவதும் கியூ–வேவுபிரிவினரைக் குவித்து மக்களை மிரட்டியது. தோழர்கள் மற்றும் வழக்கறிஞர்கள் தொடர்ச்சியாக போராடியதன் மூலம் இறுதியில் மாலை 6 மணியளவில் தோழரின் உடலை ஒப்படைத்தது. அப்பொழுது கூட உடலை கொண்டு சென்ற வேனை மருத்துவமனை வாசலில் நிறுத்தாமல், வேகமாக ஓட்டிச்செல்லச் செய்தனர் காவல்துறையினர். ஆனால் தோழர்கள் வேன்முன் படுத்து தடுத்து புரட்சிகர முழக்கம் எழுப்பினர். அதன் பின்னர் தோழரின் உடல் கே.கே.நகரில் உள்ள முன்னோடி அலுவலகத்திற்கு எடுத்து வரப்பட்டது. அதற்குள்ளாக அனைத்து புரட்சிகர அமைப்புத் தோழர்கள், ஜனநாயக ஆர்வலர்கள், மனித உரிமையாளர்கள், வழக்கறிஞர்கள் அரசு ஊழியர்கள் என அனைத்து பிரிவினரும் திரண்டு விட்டனர். அனைவரும் தோழருக்கு இறுதி அஞ்சலி செலுத்திய பின்னர் தோழரின் உடல் செங்கொடி போர்த்தப்பட்டு ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டது. ஊர்வலத்தில் கலந்து கொண்ட நூற்றுக்கணக்கான தோழர்கள், "தியாகி தோழர்" இரவீந்தர் நினைவு நீடுழி வாழ்க, "தியாகிகள் கனவை நனவாக்குவோம்,'' "புதிய சனநாயக புரட்சியை முன்னெடுப்போம்". "நக்சல்பாரிகள் தேசபக்தர்கள்" போன்ற முழக்கங்களை எழுச்சியுடன் முழங்கினர். இறுதியாக தோழரின் உடலை எரியூட்டுவதற்கு முன்னர் பல்வேறு அமைப்புத் தோழர்களும் தோழர். இரவீந்தரின் தியாகம் பற்றி உரையாற்றினர். தோழர். இரவீந்தரின் துணைவியார் தோழரது புரட்சிகர வாழ்க்கை பற்றியும், அர்ப்பணிப்பு பற்றியும் பேசிய போது, கூடியிருந்த அனைவரும் கண்ணீர் சிந்தியபடி புரட்சிகர முழக்கங்களை எழுப்பினர். இறுதியில் சமூக விடுதலைக்காக அயராது பாடுபட்டு, தனது இன்னுயிரை ஈந்த, தமிழக உழைக்கும் மக்களின் தவப்புதல்வன் தோழர். இரவீந்தரின் உடல் எரியூட்டப்பட்டது. சனவரி 19ஆம் நாளன்று தருமபுரி, நாயக்கன் கொட்டாயில் உள்ள தியாகி தோழர்கள் அப்பு, பாலன் சிலை முன்பு, தோழர். இரவீந்தரின் உடல் மீது போர்த்தப்பட்ட செங்கொடியை வைத்து முற்போக்கு மாணவர் சங்கம், முற்போக்கு இளைஞர் அணி சார்பில் அஞ்சலி கூட்டம் நடத்தப்பட்டது. எண்ணற்ற உழைக்கும் மக்கள் அஞ்சலி கூட்டத்தில் கலந்து கொண்டு தங்களின் தவப்புதல்வனுக்கு அஞ்சலி செலுத்தினர். தோழர். இரவீந்தர் உடல் மீது போர்த்தப்பட்ட செங்கொடியைக் கண்டும், அஞ்சலி செலுத்திய மக்கள் கூட்டத்தைக் கண்டும் கிலிபிடித்துப் போன காவல்துறை, உரை நிகழ்த்திக் கொண்டிருந்த மு.மா.ச மாநில செயலாளர் தோழர். பாலனையும், பிற தோழர்களையும் கைது செய்து காவல்நிலையம் கொண்டு சென்றது. கொண்டு செல்லும் வழியில் தோழர்களை கேவலமாக பேசியதுடன் தோழர். பாலனை மிருகத்தனமாக தாக்கியுள்ளான் காவல்துறை ஆய்வாளர். அதையும் மீறி தோழர்கள் புரட்சிகர முழக்கங்களை எழுப்பினர். தோழர்கள் கைது செய்யப்பட்டதைக் கண்டதும் வெகுண்டெழுந்த மக்கள், காவல் நிலையத்தை முற்றுகையிட்டனர். மக்கள் எழுச்சியைக் கண்டதும் நடுங்கிப் போன காக்கிசட்டை கோழைகள் தோழர்களை உடனே விடுவித்தனர்.

### தொடரும் காவல் துறை வெறியாட்டம்

*தோழர். இரவீந்தரை நரவேட்டையாடிய பின்னரும் இரத்த வெறி தணியாத காவல்துறை தனது வெறியாட்டத்தைத் தொடர்ந்து வருகிறது. தர்மபுரி மாவட்டம் பென்னாகரம் பகுதியில் ஆயிரக்கணக்கான அதிரடிப்படையினரையும், காவல்துறையினரையும் குவித்து `தேடுதல் வேட்டை' என்ற பெயரில் வீடுவீடாகச் சென்று மக்களை அடித்துத் துன்புறுத்தி வருகிறது. பெருங்காடு பள்ளம் கிராமமக்களை மிரட்டி தோழர். இரவீந்தர் சனவரி 10ஆம் நாள் நடந்த மோதலில் தான் கொல்லப்பட்டதாக பொய் சொல்லச் செய்துள்ளது காவல்துறை. அத்துடன் `விசாரணை' என்ற பெயரில் நாயக்கன் கொட்டாய் பகுதிக்கு தினந்தோறும் இரவு நேரத்தில் சென்று வீடுகளைத்தட்டி எழுப்பி மிரட்டி வருகின்றனர் காக்கிசட்டை கயவர்கள். கைது செய்யப்பட்ட தோழர். சிவா சேலம் சிறையில் வைக்கப்பட்டுள்ளார். சேலம் சிறையைச் சுற்றிலும் கியூ பிரிவு காவல்துறையினரை குவித்து சிவாவை சந்திக்க செல்லும் வழக்கறிஞர்கள் உட்பட அனைவரையும் மிரட்டி வருகின்றனர். சிவாவை பார்க்கச் சென்ற வழக்கறிஞர் ராகுலை பார்க்க விடாமல் செய்துள்ளனர். சிவாவிடம் வாக்குமூலம் வாங்கச் சென்ற வழக்கறிஞர்கள் தமயந்தி, அஜீதா ஆகியோரை சென்னை வரை பின் தொடர்ந்து வந்துள்ளனர். வழக்கறிஞர் தமயந்தியை காவல்நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தியுள்ளனர். அத்துடன் சேலத்தில் உள்ள இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட வழக்கறிஞர்கள் அனைவரையும் மிரட்டியுள்ளன கியூ பிரிவு நாய்கள். மேலும் தோழர். சிவாவை நீதிமன்ற அனுமதியின்றி சட்டவிரோத விசாரணை நடத்தி சித்தரவதை செய்து வருகின்றனர். சேலம் மாவட்டம் ஆத்தூர் பகுதியில் உழவர் உழைப்பாளர் மாமன்றம் செயல்பட்டு வரும் கிராமங்களில் காவல்துறையினைரக் குவித்து மக்களை மிரட்டி வருகின்றனர். சென்னையில் உள்ள முன்னோடி அலுவலகத்திற்கு வருவோரையும், அக்கம் பக்கத்தில் குடியிருப்போரையும் பிடித்து மிரட்டி வருகின்றனர். அத்துடன் இரவு நேரங்களில் திருடர்கள் போல் வந்து பக்கத்து வீடுகளைத் தட்டி எழுப்பி விசாரணை என்ற பெயரில் மிரட்டியும் வருகின்றனர். ஊழல் பெருச்சாலிகளையும், கொலைகார ஓட்டுக்கட்சி தலைவர்களையும் கால் நக்கி பிழைப்பு நடத்தும் இக்கூலிப்படை மக்களுக்காக போராடும் புரட்சிகர இயக்கத்தை ஒடுக்க இரத்த வெறிபிடித்து அலைகிறது.*



படிப்பகம்

www.padippakam.com

# பஸ் எரிப்பு பெயரில் தோழர். இரவீந்தர் படுகொலையும், பஸ்ஸோடு கொளுத்தப்பட்ட அப்பாவி மாணவிகள் படுகொலையும்.

ஆந்திர காவல்துறையினரின் 'போலி மோதல்' படு கொலைகளைக் கண்டித்து தருமபுரி மாவட்டத்தில் 2 பேருந்துகள் கொளுத்தப்பட்டதைக் காரணமாக்கி தோழர். இரவீந்தரை சனவரி 7ஆம் நாளன்று கைது செய்து 3 நாட்கள் சித்தரவதை செய்து, சனவரி 10ஆம் நாளன்று கைகளைக் கட்டி கோழைத்தனமாக சுட்டுக் கொன்றது தருமபுரி எஸ்.பி. கந்தசாமி கும்பல். அதே தருமபுரியில் பிப்ரவரி 2ஆம் நாளன்று கல்விச் சுற்றுலாவை முடித்துக் கொண்டு ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்த கோவை வேளாண்மை பல்கலைக் கழக மாணவர்களின் பேருந்தை, ஊழல் ராணி ஜெயலலிதாவுக்கு நீதிமன்றம் ஓராண்டு சிறைத்தண்டனை வழங்கியதைக் கண்டித்து அ.தி.மு.க. ரௌடிகும்பல் தீயிட்டுக் கொளுத்தியது. இதில் அப்பாவி மாணவிகள் கோகிலவாணி, ஹேமலதா, காயத்ரி ஆகியோர் உயிரோடு கொளுத்தப்பட்டு விட்டனர். கொளுத்திய அரக்கர்களை கண்முன்னே தப்பிக்க விட்டது காவல்துறை. இதனை கண்டித்து அங்கேயே சாலை மறியலில் ஈடுபட்ட மாணவர்கள் மீது தடியடி நடத்தி இரத்த வெறியாட்டம் போட்டது காக்கிசட்டை கும்பல். பஸ் எரிப்பு 'தி.மு.க.வின் திட்டமிட்ட சதி வேலை' என ஜெயலலிதாவும், 'அ.தி.மு.கவின் வெறித்தனம்' என கருணாநிதியும் ஒருவர் மீது ஒருவர் குற்றம் சாட்டுகின்றனர். இடைத்தேர்தல் நெருங்குவதால் தி.மு.க.வினர் அ.தி.மு.க.விற்கு எதிராக கண்டன பேரணி, ஆர்ப்பாட்டம் என நடத்தி ஓட்டு வேட்டை நடத்துகிறார்கள். ஜெயலலிதாவோ, சி.பி.ஐ விசாரணை கோரி கவர்னரிடம் மனு கொடுத்துவிட்டு, மூன்று மாணவிகள் குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபாய் வழங்குவதாக அறிவித்து தனது ஓட்டுச்சரிவை சரி செய்ய முயற்சிக்கிறார். மூன்று மாணவிகள் குடும்பங்களுக்கும் அரசு பணி, உதவித் தொகை என கருணாநிதி தன் பங்குக்கு அறிவித்துள்ளார். இருவரும் மூன்று அப்பாவி மாணவிகளின் கருகிய உடல்களின் மீது அரசியல் சதுரங்கம் ஆடுகிறார்கள். தீர்ப்புக்கு எதிராக அ.தி.மு.க வினர் நடத்திய கலவரத்தில் 100 பேருந்துகள் உடைக்கப்பட்டுள்ளதாகவும், 7 பேருந்துகள் கொளுத்தப்பட்டதாகவும் கருணாநிதி அறிவித்துள்ளார். பேருந்தைக் கொளுத்தியதாகக் கூறி தோழர். இரவீந்தரை கொடூரமாகக் கொன்ற தருமபுரி எஸ்.பி. கந்தசாமி, இவ்வளவு பேருந்துகளை கொளுத்தியவர்களையும் என்ன செய்யப்பேகிறார்? அனைத்துக்கும் காரணமான ஜெயலலிதாவை என்ன செய்யப் போகிறார்? இதில் வேடிக்கை என்னவென்றால், தோழர் இரவீந்தரை பயங்கரவாதி, மக்களை மிரட்டுபவர், பணம் பறிப்பவர் என்றெல்லாம் அவதூறுகளை வாரி இறைத்ததோடு, கொலை செய்த காக்கிச் சட்டை கோழைகளின் வீரத்தை பாராட்டி புளங்காகிதம் அடைந்த ஜுனியர்விகடன், மூன்று மாணவிகள் கொளுத்தப்பட்ட சம்பவத்தில் பஸ்ஸை கொளுத்தியவர்களை காவல்துறையினர் தங்கள் கண்முன் தப்பிக்க விட்டதாகவும், உயிர்களைக் காப்பாற்ற வராத போலீஸ் நியாயம் கேட்ட மாணவர்கள் மீது தடியடி, கண்ணீர்புகை என மிருகத்தனமாகப் பாய்ந்ததாகவும் எழுதியுள்ளது. அத்துடன் கைது செய்யப்பட்டு அ.தி.மு.க வினருக்கு மினரல் வாட்டரும், சுடச்சுட டீயும், படிக்க பேப்பரும் கொடுத்து போலீஸ் உபசரித்ததாகவும் எழுதியுள்ளது. தோழர். இரவீந்தரைக் கொன்றதற்காக ஜீவி உச்சிமுகர்ந்த அதே காக்கிசட்டை கயவர்கள் தான் இதையும் செய்கிறார்கள். உழைக்கும் மக்களின் விடுதலைக்காக பாடுபட்ட தோழர். இரவீந்தரின் மூச்சை நிறுத்திய அதே காவல்துறையினர் தான் இங்கு மூன்று மாணவிகளைக் கொளுத்திய அ.தி.மு.க.. ரவுடிகளுக்கு சாமரம் வீசுகிறார்கள். பொதுமக்கள் உடையில் வந்து சுற்றி வளைத்து இரவீந்தரை சுட்டதாக கதைவிட்ட அதே காவல்துறையினர்தான் இங்கு கொளுத்திய கயவர்களை கண் முன்னே தப்பிக்க விட்டனர். பொது மக்களின் ஒத்துழைப்போடு தோழர். இரவீந்தரை வேட்டையாடியதாகக் கூறி அப்பாவி பொதுமக்கள் மீதும் கொலைபழியை சுமத்திய அதே கந்தசாமியின் காவல்துறையினர் தான் நியாயம் கேட்ட அப்பாவி பொதுமக்களையும், மாணவர்களையும் இரத்த வெள்ளத்தில் மூழ்கடித்துள்ளனர். மொத்தத்தில் தோழர். இரவீந்தரை கொடூரமாகக் கொலை செய்த அதே ஆளும்வர்க்க கந்தசாமி கூட்டணிதான் மூன்று அப்பாவி மாணவிகளை துடிதுடிக்க உயிருடன் கொளுத்தியுள்ளது. உழைக்கும் மக்களின் விடுதலைக்காக வாழ்வை அர்ப்பணித்த தியாகி தோழர். இரவீந்தரை பயங்கரவாதி மக்களை மிரட்டி பணம் பறிப்பவர் என பொய்யாக சித்தரித்த பத்திரிக்கைகளும், ஆட்சியாளர்களும் மாணவிகளை கொளுத்திய வெறிநாய்களை என்னவென்று அழைக்கப் போகின்றனர். உண்மையில் கொளுத்தியதாகக் கைது செய்யப்பட்டுள்ளவர்கள் யாரும் நீதிமன்றத்தால் தண்டிக்கப்படப் போவதில்லை. மாறாக இன்னும் சிறிது நாட்களில் சிறையிலிருந்து வெளிவந்து, அவர்கள் செய்துள்ள மகத்தான சாதனைக்காக அம்மாவின் ஆசியுடன் எம்.எல்.ஏ வாகவோ, எம்.பி யாகவோ வலம் வருவார்கள். அப்பொழுது அந்த பொறுக்கிகளுக்கு பத்திரிக்கைகளும், நீதிமன்றங்களும் தலைவணங்கத்தான் போகின்றன. மூன்று மாணவிகள் படுகொலை என்பது கருணாநிதிக்கு இடைத்தேர்தலில் ஓட்டு வேட்டையாடுவதற்கான வாய்ப்பு. ஜெயலலிதாவுக்கோ, ஊழல் வழக்குகளில் தனக்கு எதிராக சிறு தீர்ப்பு வழங்கப்பட்டாலும் இரத்த ஆறு ஓடும் என விடுத்துள்ள எச்சரிக்கை. பிற ஓட்டுக்கட்சிகளுக்கோ, துக்க வீட்டில் ஒப்பாரி வைத்து அரசியல் பிழைப்பு நடத்த கிடைத்த அரியசந்தர்ப்பம். ஆளும் வர்க்கங்களுக்கோ, தங்களது கொடும் சுரண்டல் மற்றும் மக்கள் விரோத கொள்கைகளிலிருந்து மக்களை திசை திருப்ப கிடைத்த ஒரு சம்பவம். பத்திரிக்கைகளுக்கோ, இளந்தளிர்களின் கருகிய உடல்களையும், எரியும் பேருந்தையும் பல கோணங்களில் காட்டி பத்திரிக்கை விற்பனையை அதிகரிக்க கிடைத்த அரிய செய்தி. ஆனால் கோடானு கோடி உழைக்கும் மக்களுக்கோ, வருங் காலத்தில் நிகழப்போகும் ஆளும் வர்க்க பாசிச வெறியாட்டத்திற்கான அபாய மணி, இதனை புரிந்து கொண்டு உழைக்கும் மக்களும், மாணவர்களும், இளைஞர்களும் ஓரணியில் திரண்டு ஆளும் வர்க்கங் களுக்கு எதிராக தியாகி தோழர் இரவீந்தர் நடந்த வழியில் புரட்சிகர யுத்தத்தை முன்னெடுத்துச் செல்வது ஒன்றே தீர்வாகும்.



படிப்பகம்

www.padippakam.com

# வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த மகத்தான சீனப்புரட்சியின் 50வது ஆண்டு

"சீனமக்கள் எழுந்து விட்டனர்" - 1949 அக்டோபர் 1 ஆம் நாளன்று சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்டதை உலகுக்கு பிரகடனப் படுத்திய போது தோழர். மாவோ முழங்கினார். ஆம்! உலக மனித குலத்தில் கால்பகுதி மக்கள் அடிமைத்தளையை தகர்த்தெறிந்து எழுந்து நின்றனர். 600 மில்லியன் மக்கள் ஏகாதிபத்திய நிலபிரபுத்துவ கோரப்பிடியிலிருந்து தங்களை விடுவித்துக் கொண்டு எழுந்து நின்றனர். தங்களின் உதிரத்தை ஆண்டாண்டு காலம் உறிஞ்சிக் கொழுத்த சுரண்டல் கூட்டத்தை விரட்டியடித்து, தங்களுக்கான குடியரசை நிறுவிக்கொண்டு எழுந்து நின்றனர். அளப்பறிய தியாகம், மகத்தான அர்ப்பணிப்பின் மூலம் சீனப்புரட்சியை வெற்றிகரமாக நிறைவேற்றி எழுந்துநின்றனர்.



*1949ல் சீன மக்கள் குடியரசை தோழர். மாவோ உலகிற்கு அறிவித்தல்*

இன்றும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சீனப்புரட்சி வரலாறை சீனமக்கள் தங்களின் தியாகத்தாலும், இரத்தத்தாலும் எழுதினார்கள். தோழர். மாவோவின் வழிகாட்டுதலில், சீனகம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையில் இம் மகத்தான சாதனையை நிகழ்த்தினார்கள். மாபெரும் சீனப்புரட்சியானது சீனமக்களின் வீரஞ்செறிந்த நீண்டகால யுத்த வரலாறாகும். ஆண்டாண்டு காலமாக நிலபிரபுத்துவ, ஏகாதிபத்திய சக்திகளுக்கு எதிராக கடும் போர் புரிந்து வந்த சீனமக்கள், இறுதியில் சீனகம்யூனிஸ்ட் கட்சி தலைமையிலேயே அப்போரை வெற்றிகரமாக முடித்தனர். இச்சாதனை மூலம் உலக மக்களுக்கு முன்னுதாரணத்தை படைத்தனர்.

சீன வரலாறானது நீண்ட நெடிய போராட்ட வரலாறைக் கொண்டது. 1851 இல் நிலவுடைமைக்கு எதிராக நடத்தப்பட்ட டாய்பிங் புரட்சியின் மூலம் புரட்சிகர அரசாங்கம் நிறுவப்பட்டது. ஆனால் 1864 இல் உள்நாட்டு பிற்போக்காளர்களும், ஏகாதிபத்தியங்களும் இணைந்து நடத்திய தாக்குதலில் புரட்சிகர அரசாங்கம் அழிக்கப்பட்டது. 1905 இல் சன்யாட்-சென் தலைமையில் நிறுவப்பட்ட புரட்சிகர அணியானது, முதலாளிய ஜனநாயக புரட்சியை முன்னெடுத்து சென்றது. இப்புரட்சியின் மூலம் 1911 இல் நிலபிரபுத்துவ செங் முடியரசானது தகர்த்தெறியப்பட்டு புரட்சிகர அரசாங்கம் நிறுவப்பட்டது. முதல் உலக யுத்தம் முடிவுற்ற பின்னர் 1919 இல் வெர்சைல்ஸ் அமைதி மாநாட்டில் சீன ஆட்சியாளர்கள் ஏகாதிபத்தியங்களிடம் சரணடைந்து போட்டுக் கொண்ட துரோக ஒப்பந்தத்திற்கு எதிராக மாணவர்களின் வரலாற்று சிறப்புவாய்ந்த மே-4 ஆம் நாள் இயக்கம் துவங்கியது. மாணவர்களால் துவங்கப்பட்ட இயக்கமானது உடனடியாக தொழிலாளர்களின் தலைமையில் போர்குணமிக்கதாக முன்னெடுக்கப்பட்டது.

**சீனகம்யூனிஸ்ட் கட்சியின் தோற்றம்**

1917 - இரசியாவின் அக்டோபர் சோசலிச புரட்சியானது உலகம் முழுவதும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. அதன் ஒரு பகுதியாக சீனாவிலும் தாக்கம் எதிரொலித்தது. 1918 இல் சீனாவின் பல்வேறு பகுதிகளில் மார்க்சிய படிப்பு வட்டங்கள் உருவாகின. சீனாவில் முதன்முதலாக மார்க்சியத்தை நிறுவிய தோழர். லிடா-சாவ் பத்திரிக்கைகள் மூலம் மார்க்சியத்தைப்பரப்பினார். 1920இல் மார்க்சிய படிப்பு வட்டங்கள் அனைத்தும் ஒருங்கிணைக்கப்பட்டு 1921 இல் கம்யூனிஸ்ட் அகிலத்தின் வழிகாட்டுதலுடன் சீன கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாடு நடைபெற்றது. இதில் மாவோ உட்பட 12 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். சீன கம்யூனிஸ்ட் கட்சி நிறுவப்பட்டது முதல், கட்சியானது தொழிலாளர்களை அணிதிரட்டி எண்ணற்ற போர்குணமிக்க போராட்டங்களை முன்னெடுத்தது. 1923 இல் நடைபெற்ற சீனகம்யூனிஸ்ட் கட்சியின் மூன்றாவது காங்கிரசில் சன்யாட்சென் இன் கோமிங்டாங் கட்சியுடன் ஐக்கிய முன்னணி கட்டுவது என தீர்மானிக்கப்பட்டது. அதன்படி 1924 இல் நடைபெற்ற கோமிங்டாங்கின் முதல் தேசிய காங்கிரசில் ஏகாதிபத்திய, நிலபிரபுத்துவ எதிர்ப்பு, புரட்சிகர வர்க்கங்களைக் கொண்ட ஜனநாயக கூட்டரசை நிறுவுதல், மக்கள் நல்வாழ்வு, சோவியத் யூனியனுடன் கூட்டு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட சன்யாட்சென்னின் மக்களின் புதிய மூன்று கொள்கைகள்



படிப்பகம்

ஏற்றுக் கொள்ளப்பட்டு ஐக்கிய முன்னணி நிறுவப்பட்டது.

## வடபுல யுத்த இயக்கம்

சீனாவின் முதல் உள்நாட்டு புரட்சிகர யுத்தம் என அழைக்கப்படும் வடபுல யுத்த இயக்கமானது 1926 இல் துவங்கியது. 1925 முதல் அதற்கான அடித்தளம் நிறுவப்பட்டது. நாடு முழுவதும் எண்ணற்ற தொழிலாளர் எழுச்சிகளும், உழவர் இயக்கமும் கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் முன்னெடுக்கப்பட்டது. இலட்சக்கணக் கான உழவர்கள் உழவர் சங்க உறுப்பினர்கள் ஆனார்கள். 1925 இல் ஜப்பான், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியங்கள் சீன யுத்த பிரபுக்களுக்கு நேரடியாக உதவின. இத்தகைய சூழலில் வடக்கு யுத்த பிரபுகளுக்கு எதிரான வடபுல யுத்த இயக்கமானது, கம்யூனிஸ்ட் கட்சி, கோமின்டாங் கூட்டணியால் துவங்கப்பட்டது. பெருமளவிலான உழவர்கள், தொழிலாளர்களின் பங்கேற் போடு யுத்தமானது துவங்கப் பட்டது. ஆறுமாத காலத்திற்குள் ளாகவே புரட்சி படையானது பல யுத்த பிரபுக்களின் படைகளை ஒழித்து பெரும்பாலான பகுதி களை விடுவித்தது. ஏகாதிபத்திய, யுத்தபிரபுக்களின் படைகளை தோற்கடிக்கும் இறுதி தருவாயில், கம்யூனிஸ்ட் கட்சியின் அப்போதைய செயலாளரான சென்தூ – சியின் சரணடைவுவாத நிலைப்பாடாலும், புரட்சி படைக்குள் இருந்த முதலாளிய, நிலபிரபுத்துவ சக்திகளின் துரோகத்தாலும் புரட்சிப்படை யானது தோல்வியை சந்திக்க நேர்ந்தது. துவக்கத்திலிருந்தே சென்தூ – சி வலது சந்தர்ப்பவாத நிலைப்பாட்டை முன் வைத்தார். ஜனநாயக புரட்சிக்கு தலைமை தாங்கவேண்டியது பாட்டாளி வர்க்கத்தின் கடமையல்ல; தேசிய முதலாளிய வர்க்கத்தின் கடமையாகும் எனக் கூறினார். உழவர் புரட்சி திட்டத்தை மறுத்ததுடன், உழவர்களை அணிதிரட்டுவதையே எதிர்த்தார். அத்துடன் எந்த வகையிலாவது முதலாளிகளுடன் கைகோர்க்கத் தயாராக இருந்தார். இத்தகைய வலது சந்தர்ப்பவாதத்தை எதிர்த்தும், கட்சிக்குள் இடது விலகல் கருத்துக்களை எதிர்த்தும் மாவோ 1926 இல் "சீன சமூகத்தில் வர்க்கங்களின் பகுப்பாய்வு" என்ற கட்டுரையையும், 1927 இல் ஹுனானுக்கு சென்று "ஹுனான் அறிக்கையும்" எழுதினார். மறுபுறத்தில், 1925 இல் சன்யாட்சென் மறைவுக்கு பின் கோமிங்டாங்கின் தலைமைக்கு வந்த சியாங்கே-சேக் ஏகாதிபத்தியங் களுடன் உறவு வைத்துக் கொண்டு கம்யூனிஸ்டுகளை படுகொலை செய்யத்துவங்கினான். 1928 ஜனவரி முதல் ஆகஸ்டு வரை ஒரு லட்சம் உழவர்கள், தொழிலாளர்கள் சியாங்கே சேக்கால் படுகொலை செய்யப்பட்டனர். மொத்தத்தில் சென்தூ-சியின் வலது சந்தர்ப்பவாதத் தாலும், சியாங்கே சேக்கின் துரோகத்தாலும் முதல் புரட்சிகர உள்நாட்டு யுத்தம் தோல்வியுற்றது.



சீன தளப்பகுதியில் பெண் கெரில்லாக்கள் குறித்த ஓவியம்

1927 முதல் 1931 வரையிலான காலகட்டத்தில் வலது, இடது விலகல்களைக் களைந்து, புரட்சிகர தளப்பகுதிகளை நிறுவி, புரட்சியை முன்னெடுத்து செல்வதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. 1927 இல் சீன கம்யூனிஸ்ட் கட்சி மாநாடு நடத்தப்பட்டது. இம்மாநாட்டில் சென்தூ-சியின் சரணடைவுவாத நிலைப்பாடு கடுமையாக விமர்சிக்கப்பட்டதுடன், தலைமை பொறுப்பிலிருந்து அவர் நீக்கப்பட்டார். மாவோ ஹுனானுக்கு சென்று தொழிலாளர்கள், உழவர்களைக் கொண்ட புரட்சிகர படையை நிறுவியதுடன், அப்படையை சிங்காங் மலைக்கு அணிவகுத்துச் சென்று, அங்கு முதல் புரட்சிகர தளப்பகுதியை நிறுவினார். அத்துடன் இக்காலகட்டத்தில் தான் தளப்பகுதிகளை அதிகரிக்கச் செய்து, சுற்றிவளைத்து நகரங்களைக் கைப்பற்றுவது, செம்படை ஆகியவை குறித்து வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கட்டுரைகளை எழுதினார். 1930 வாக்கில் புரட்சிகர படைகளும், தளப்பகுதிகளும் பல பகுதிகளுக்கு விரிவடைந்தன. செம்படையானது ஒரு லட்சம் வீரர்களைக் கொண்டதாக வளர்ச்சியடைந்தது.

## வரலாறு படைத்த நீண்ட பயணம்

1931 இல் ஜப்பான் ஏகாதிபத்தியம், சீனாவை முழுமையாக விழுங்கி விடும் நோக்கத்துடன் சீனா மீது தாக்குதல் தொடுத்தது. இத்தாக்குதலுக்கு எதிராக போராடாமல் சியாங்கே-சேக் ஜப்பானுக்கு அடிபணிந்ததுடன், சீனாவின் இறையாண்மையையே ஜப்பானின் காலடியில் போடும்படியாக ஒப்பந்தம் போட்டுக்கொண்டான். இதன் விளைவாக மக்கள் மத்தியில் ஜப்பான்-சியாங்கே-சேக் எதிர்ப்பு உணர்வு பலமாக கிளம்பியது. நாடு முழுவதும் தொழிலாளர், உழவர், மாணவர் போராட்டங்கள் வெடித்துக் கிளம்பின. மறுபுறத்தில், செம்படையை சுற்றிவளைத்து தாக்கி முறியடிப்பதற்காக சியாங்கே-சேக் தொடர்சியான தாக்குதல்களை மேற்கொண்டான். நாடு முழுவதும் எண்ணற்ற புரட்சியாளர்களையும், புரட்சிகர எழுத்தாளர்களையும், ஆதரவாளர்களையும் கொன்று குவித்தான். 1927 - 1935 காலகட்டத்தில் மட்டும் 3 லட்சத்திற்கும் மேற்பட்டோர் அவனால் படுகொலை செய்யப்பட்டனர். அதே வேளையில் ஐக்கிய முன்னணியைப் புறக்கணித்து விட்டு, நகரங்களை தாக்கி

www.padippakam.com

கைப்பற்றுவது என்ற இடது விலகல் நிலைப்பாடு கம்யூனிஸ்ட் கட்சி தலைமையில் ஆதிக்கம் புரிந்தது. இத்தகைய கட்சித்தலைமையில் மேலோங்கி இருந்த இடது திசைவிலகல்களுக்கு எதிராகவும், அகநிலைவாத தவறுகளுக்கு எதிராகவும் மாவோ, முக்கியத்துவம் வாய்ந்த "முரண்பாடு பற்றி", "நடைமுறை பற்றி" ஆகிய தத்துவக் கட்டுரைகளை இக்காலகட்டத்தில் எழுதினார்.

இதன் விளைவாக, சியாங்கே சேக் படையின் முற்றுகையை தகர்த்தெறிவதற்காக செம்படை வரலாற்றில் முத்திரை பதித்த நீண்ட பயணத்தை 1934 இல் மேற்கொண்டது. 12 மாத காலத்தில் செம்படையானது எதிரியின் முற்றுகை வளையங்களைத் தகர்த்தெறிந்து, பனிமலைகள், சமவெளி என 12,500 கிலோமீட்டர் தூரத்தை சொல்லொண்ணா இன்னல்களுடன் கடந்து வரலாறு படைத்தது. 3 லட்சம் வீரர்களைக் கொண்டு துவங்கப்பட்ட நீண்டபயணத்தின் இறுதியில் 30,000 வீரர்களே எஞ்சினர். ஆனால் இந்நீண்ட பயணத்தின் போது செம்படை கடந்த பகுதிகள் முழுவதும் புரட்சிகர அரசியல் பரவியது. புரட்சிக்கான விதை விதைக்கப்பட்டது. அதே காலகட்டத்தில் நடைபெற்ற கட்சியின் வரலாற்று சிறப்புமிக்க திசுன்யி மாநாட்டில் கட்சி தலைமையில் இருந்த இடது விலகல் நிலைப்பாடு கொண்டோர் கடுமையாக விமர்சிக்கப்பட்டு பதவி நீக்கம் செய்யப்பட்டனர். தோழர். மாவோவின் சரியான நிலைப்பாடு ஏற்றுக் கொள்ளப்பட்டு, அவரது தலைமை நிறுவப்பட்டது.

## ஜப்பான் எதிர்ப்பு ஐக்கிய முன்னணி

1931 இல் சீனா மீது ஜப்பான் ஆக்கிரமிப்பு யுத்தம் தொடுத்தவுடன் சீன கம்யூனிஸ்ட் கட்சி ஜப்பான் எதிர்ப்பு ஐக்கிய முன்னணி முழக்கத்தை முன் வைத்தது. ஆனால் 1935 வரை கட்சித்தலைமையின் இடது திசைவிலகல் காரணமாக இம்முழக்கமானது முறையாக நடைமுறைக்குக் கொண்டு செல்லப்படவில்லை. 1935 இல் மாவோ தலைமைப் பொறுப்பேற்ற பின் ஜப்பான் எதிர்ப்பு ஐக்கிய முன்னணிக்கான அறைகூவல் விடுக்கப்பட்டது. கம்யூனிஸ்ட்கட்சி, செம்படை, புரட்சிகர தளப்பகுதிகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டு ஐக்கிய முன்னணி கட்ட தீர்மானிக்கப்பட்டது. 1936 வரை ஜப்பானுடன் கைகோர்த்துக் கொண்டு செம்படையைத் தாக்கி வந்த சியாங்கே-சேக்கிற்கு கோமின்டாங் கட்சிக்குள்ளேயே பலத்த எதிர்ப்பு கிளம்பியது. அதன் விளைவாக வேறுவழியின்றி கம்யூனிஸ்ட்கட்சிக்கு எதிரான தாக்குதலை நிறுத்திவிட்டு, ஐக்கிய முன்னணியில் பங்கேற்க சியாங்கே-சேக் ஒப்புக்கொண்டான். 1937இல் நடைபெற்ற தேசிய மாநாட்டில், ஐக்கிய முன்னணியில் பாட்டாளிவர்க்க தலைமையை நிறுவுவது குறித்து வலியுறுத்தப்பட்டது. ஜனநாயகத்திற்கும், விடுதலைக்கும் போரிடுவதே கட்சியின் முதன்மையான கடமை என மாவோ எடுத்துரைத்தார். மறுபுறத்தில் ஜப்பான் ஏகாதிபத்தியம் சீன மக்கள் மீது கடும் தாக்குதலைத் தொடுத்தது. வரலாறு காணாத அளவில் மக்களைக் கொன்றுகுவித்தது. ஒரு மாதகாலத்தில் 3 லட்சம் மக்கள் கொல்லப்பட்டனர். பிடிபட்ட செம்படையினர் உயிருடன் கொளுத்தப்பட்டனர். இக்கொடூரத்தாக்குதலுக்கு எதிராக 40,000 வீரர்களை மட்டுமே கொண்ட செம்படை கடும்போர் புரிந்தது. பலபகுதிகளில் ஜப்பான் படைகள் துரத்தப்பட்டு ஜப்பான் எதிர்ப்பு தளப்பகுதிகள் நிறுவப்பட்டன. தொடர்ச்சியான வெற்றிகளைக் கண்டதும், உடனடியாக முழுவெற்றி அடைவது என்ற தவறான போக்கு கட்சிக்குள் பரவியது. இதற்கு எதிராக, மாவோ "நீண்டகால யுத்தம் பற்றி" என்ற கட்டுரையை எழுதினார். 1940 இல் ஏகாதிபத்தியங்களுடன் கூடிக் குலாவிய சியாங்கே-சேக் மீண்டும் செம்படையைத் தாக்கத் துவங்கினான். எண்ணற்ற செம்படை வீரர்களைக் கொன்று குவித்தான். மாவோ, ஏகாதிபத்திய அடிவருடிகளை தனிமைப்படுத்தி, நடுநிலை சக்திகளை வென்றெடுத்து, முற்போக்கு சக்திகளை வளர்த்தெடுத்து ஐக்கிய முன்னணியை பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தினார். இக்காலகட்டத்தில் தான் "புதிய ஜனநாயகம் பற்றி" என்ற மகத்தான கட்டுரையை எழுதினார். செம்படையானது பல்கிப் பெருகியது. தளப்பிரதேசங்கள் நிறுவப்பட்டன. இலட்சக்கணக்கான மக்களைக் கொண்ட மக்கள் தற்காப்பு குழுக்கள் உருவாக்கப்பட்டன. ஜப்பான் ஏகாதிபத்தியம் தோல்வியின் விளிம்பிலிருந்த பொழுது நடைபெற்ற சீன கம்யூனிஸ்ட் கட்சி மாநாட்டில் 'கூட்டு அரசாங்கம் பற்றி' என்ற அறிக்கையை மாவோ சமர்பித்தார். சீனாவை ஒருங்கிணைத்து, ஜனநாயக அரசை நிறுவுவது குறித்து அதில் விளக்கினார்.

கடும் போரின் மூலம் ஜப்பானிய படைக்கு பெரும் சேதத்தை விளைவித்த அதே வேளையில் மக்கள் படையானது பல்கிப் பெருகியது. 1945 இல் மக்கள் படையானது 9 இலட்சம் வீரர்களைக் கொண்டதாக வளர்ச்சியடைந்தது. மக்கள் தற்காப்பு படையானது ஒரு கோடியாக அதிகரித்தது. எண்ணற்ற நகரங்களையும், கிராமப்பகுதிகளையும் மக்கள் படை விடுவித்தது. இறுதியாக 1945 செப்டம்பர் 2 ஆம் நாளன்று ஜப்பான் ஏகாதிபத்தியம் சரணடைந்தது.

## உள்நாட்டு யுத்தம் மூலம் இறுதி வெற்றிபெற்ற சீனப்புரட்சி

ஜப்பானிய ஏகாதிபத்தியம் சரணடைந்த உடன், அதன் படைகளை ஆயுதங்களை ஒப்படைக்கச் செய்வதற்கு மாறாக, அமெரிக்காவுடன் கைகோர்த்துக் கொண்ட சியாங்கே-சேக் ஜப்பான் படைகளை தனது படையுடன் இணைத்துக் கொண்டு கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிரான நடவடிக்கையில் முழுவீச்சாக இறங்கினான். மறுபுறத்தில் சீனகம்யூனிஸ்ட் கட்சி விடுதலை செய்யப்பட்ட பகுதிகளில் நிலச்சீர்திருத்தத்தை முழுவீச்சில் நடைமுறைபடுத்தியது. நிலபிரபுக்களின் நிலங்களும், சொத்துக்களும் பறிமுதல் செய்யப்பட்டன. மக்கள்



படிப்பகம்

www.padippakam.com

விரோத சக்திகள் தண்டிக்கப்பட்டனர். அத்துடன் ஜனநாயகம், அமைதியைக் காக்கவும், உள்நாட்டு யுத்தத்தை தவிர்க்கவும் கம்யூனிஸ்ட் கட்சி முயற்சித்தது. ஆனால் சியாங்கே-சேக்கோ ஏகாதிபத்தியங்களின் துணையுடன் செம்படை மீது யுத்தம் தொடுத்தான். 43 இலட்சம் பேரைக் கொண்ட கோமிங்டாங் படையானது விடுதலைபிரதேசங்களை சுற்றி வளைத்து தாக்கியது. இத்தாக்குதலுக்கு அமெரிக்கா நிதி உட்பட அனைத்து உதவிகளையும் வழங்கியது. ஆனால் மக்களின் துணையுடன் செம்படை கடும் யுத்தத்தின் மூலம் கோமின்டாங் படைகளை சிதறடித்தது. இறுதியில் 1949 ஆம் ஆண்டு ஒட்டு மொத்த சீனாவும் விடுவிக்கப்பட்டது. 1949 செப்டம்பர் 21 ஆம் நாளன்று பீகிங்கில் நடைபெற்ற மாநாட்டில் சீன மக்கள் குடியரசு நிறுவப்பட்டது. ஆண்டாண்டு காலமாய் நிலபிரபுத்துவ நுகத்தடியிலும், ஏகாதிபத்திய சுரண்டலிலும் உழன்று வந்த சீன மக்கள் தங்களின் விடுதலையை சாதித்தனர். எதிரியுடன் நடந்த கடும் சமரில் அளப்பறிய தியாகம் புரிந்து வெற்றி கொண்டனர். எதிரியின் ஆயுதங்களும் படைகளும் தங்களது ஒன்றுபட்ட சக்தி முன்னால் வெறும் அட்டைக் காகிதங்களே, என்பதை நிரூபித்தனர். வரலாற்றின் இருண்ட பாகத்தில் முடங்கிக் கிடந்தவர்கள் வரலாற்றையே படைத்துவிட்டனர். ஆம்! 1949 அக்டோபர் 1 ஆம் நாளன்று சீனவிடுதலையை உலகுக்கு பிரகடனம் செய்த போது தோழர். மாவோ கூறியது போல, "சீன மக்கள் எழுந்துவிட்டனர்."

—விஜயகுமார்.

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து, கைது செய்யப்பட்டோரை விடுவிக்கவும், போலீசின் அடக்குமுறையைக் கண்டித்தும் சிறை முற்றுகைப் போராட்டம் நடந்தது. போராட்டத்தின் வீரியத்தை கண்ட அமெரிக்க ஜனாதிபதி பில்கிளிண்டனோ, 'போராட்டக்காரர்களின் உணர்வுகளை கணக்கில் கொள்ளவேண்டும்' என்று கூறி நாடகமாடினார்.

மாநாட்டின் நிகழ்ச்சிகளை விட போராட்டமே மேலோங்கி இருந்தது. வெகுசன ஊடகங்களிலும் இது தொடர்பான செய்திகளே அதிகம் இடம் பெற்றன. கருத்துக் கணிப்பிலும் சியாட்டில் மற்றும் ஒட்டு மொத்த அமெரிக்க மக்கள் இப்போராட்டத்தை ஆதரித்தனர்.

மாநாட்டிற்கு எதிராக அரங்கத்தின் அருகிலும் சிறைகளின் முன்பாகவும் போராடியதோடு அன்றி, உலக வணிக அமைப்பின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள ஜெனீவாவில், கணிப்பொறி வாயிலாக மாநாட்டின் நிகழச்சிகளை ஒருங்கிணைப்பதை தடுக்கும் வண்ணம் அங்கேயும் போராட்டம் நடத்தி மின்சார டிரான்பார்மர்களை நாசப்படுத்தினர் போராளிகள்.

இவ்வாறு, உலகையே சுரண்டும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக போராட்டங்களும் உலக அளவில் நடைபெறுகிறது. இப்போராட்டத்தில், ஆண்-பெண் வேறுபாடு, நிறப்பாகுபாடு, மொழி வேற்றுமை, மற்றும் நாடு, மதம் உட்பட அனைத்து தடைகளையும் மீறி முதலாளியச் சுரண்டலுக்கு எதிராக ஒன்றுபட்ட உணர்வே மேலோங்கியது.

ஏகாதிபத்தியங்களை நக்கிப் பிழைக்கும் இந்திய ஆளும் வர்க்கமானது, இந்தியாவை 5 ஆண்டுகளுக்கு முன்னரே உலக வணிக அமைப்பில் இணைத்துவிட்டாலும் ஏகாதிபத்தியங்களிடம் இந்தியா சரணடையவில்லையென்றும் இந்தியா தனது நிலையை விட்டுக் கொடுக்காமல் மாநாட்டில் கலந்து கொண்டதாகவும் அமைச்சர் முரசொலி மாறன் நாடாளுமன்றத்திலும் வெளியிலும் 'குப்புற விழுந்தாலும் மீசையில் மண் ஒட்டாத கதை'யாக பீற்றிக் கொள்கிறார். சிபிஐ, சிபிஎம் போன்ற போலி கம்யூனிஸ்டுகளோ, உலக வணிக அமைப்பை எதிர்ப்பதாக ஒரு புறம் சொல்லிக் கொண்டாலும் மறுபுறம் மாநாட்டில் இந்தியா உறுதியாக இருந்ததாக முரசொலி மாறனுக்கு தடவிக் கொடுக்கின்றனர்.

1960களிலும் 1970களிலும் வெள்ளைநிறவெறியை எதிர்த்தும் வியட்நாம் மீதான அமெரிக்காவின் ஆக்கிரமிப்பை எதிர்த்தும் நடைபெற்ற போராட்டங்களுக்குப் பின்னர் இப்போராட்டமே பெரிய அளவில் நடைபெற்றது. சியாட்டில் நகர நிர்வாகத்தின் அடக்குமுறையைக் கண்டித்து இன்றும் போராட்டம் தொடர்கிறது. நகர தலைமை போலீஸ் அதிகாரி வேறுவழியின்றி பதவி விலகிவிட்டார். சியாட்டில் நகரம் தொழிற்சங்கங்களின் கோட்டை என்று தெரிந்தும் ஏன் இந்த நகரத்தில் இம்மாநாட்டை கூட்டியிருக்க வேண்டும் என்றும் இப்போராட்டத்தினால் சுதந்திர வணிக(?) எதிர்ப்பு மேலோங்கிவிடக் கூடாது என்றும் ஏகாதிபத்திய எடுபிடிகள் கேட்கின்றன.

இறுதியாக, உலகத் தொழிலாளிகளே ஒன்று சேருங்கள்! என்று அறைகூவல் விட்டு மார்க்ஸ் எழுதிய கம்யூனிஸ்ட் அறிக்கை வெளியாகி 150 ஆண்டுகள் ஆன பின்னரும் அம்முழக்கமானது இன்றும் மிகவும் பொருத்தமானதாக உள்ளதை இப்போராட்டம் நிரூபித்துவிட்டது.

ஏகாதிபத்தியங்களின் உலகமயமாக்கலுக்கு எதிராய் உலக அளவில் தொடர்ச்சியாய் அணிதிரண்டு இவ்வுலகிலிருந்து ஏகாதிபத்தியத்தை முற்றாகத் துடைத்தெறியப்பட வேண்டும். அதற்கு இப்போராட்டம் சிறந்த முன்னோட்டமே.

— சர்ச்சில்




படிப்பகம்

www.padippakam.com

# சொர்க்கமும் உங்களுக்கு பாதுகாப்பில்லை

ஒடுக்கப்பட்டவர்கள் உங்களைத் தேடி அலைகிறார்கள்
இழந்த வாழ்க்கையை கண்களில் ஏந்தி
உருண்ட தலைகளை கைகளில் ஏந்தி
விளைநிலங்கள் நிறைந்த கிராமப்புறங்களிலும்
கெரில்லாக்களுக்கு ஏற்ற காட்டுப்பகுதிகளிலும் மட்டுமல்ல
நவீன நகரங்களின்,
சந்தடி நிறைந்த நாற்சந்திகளிலும்
உயர்ந்த கட்டிடங்களின் ஒவ்வொரு அறைக்குள்ளும்
உருண்ட தங்களின் தலைகளை
எண்ணியபடி வருகிறார்கள்
உங்கள் விறைத்த படைகளின்
அணிவகுப்பிற்கு நடுவிலும்
வெறிநாய்கள் நிறைந்த பங்களாகளுக்குள்ளும்
உருவிய வாளுடன் உங்களைத் தேடி அலைகிறார்கள்
நீங்கள் வெட்டிய உடல்களிலிருந்து
கொட்டிய இரத்தத்தின்
காட்டாற்றில் எதிர்நீச்சலடித்து
எதிர்படும் தடைகளுக்கு லாவகமாக விலகி
சுழிகளின் போக்கில் ஒரு சுற்று சுற்றி
எதிரிகளை நோக்கி வருகிறார்கள்
கடலின் நடுவிலோ, கடல் கடந்த தேசங்களிலோ
ஒளிந்து கொள்ள உங்களுக்கு ஓர் இடமுமில்லை
சொர்க்கமும் உங்களுக்கு பாதுகாப்பில்லை.



# பல ரணங்களும்



தண்ணீருடான உறவு
தெருவில் புரண்டோடிய மழைவெள்ளத்தில்
காகிதக் கப்பல் விட்டபோதே தொடங்கிவிட்டது.
குந்தாணி போடுதல்; கரைமீதிருந்து
கர்ணமடித்தல்; மூச்சுப் பிடித்து விளையாடுதல்
எல்லாம் சிறுவயதிலேயே அத்துப்படி,

கண்கள் சிவந்து போனாலும்
மணிக்கணக்கில் தொடரும் தப்புக்குச்சி ஆட்டம்.

இப்படியாய் வளர்ந்தவர்கள்
தாயின் மடியில் பிள்ளைகளாய்
தாமிரபரணியில் துள்ளியவர்கள்
எப்படி மூழ்கி சாகக்கூடும்?

வலைவிரித்து வாரிக்கொட்டியவன் சொல்கிறான்
நீரில் மூழ்கி இறந்துவிட்டன என்று
உறுதிமொழி எடுத்துக்கொண்டு பணியில் சேர்ந்தவனின்
அறிக்கை சொல்கிறது
கண்கள் பிதுங்கி முகம் சிதைந்துகிடக்கும் பிணங்களை
ஆற்றில் மூழ்கி இறந்ததென்று

- ரெட்ணன்

படிப்பகம்

www.padippakam.com

# பதினேழு உயிர்களும்

கிழிந்து தொங்கிய உதடுகளும்
ரத்தம் வழிந்த காதுகளும்
சமத்துவ முகமூடியை கிழித்துவிட்டன.

கலவரத்திற்குக் காரணம்
பெண் போலீஸ் மானபங்கமாம்
பாவம் பெண்போலீசுகள்
காக்கிச் சட்டை போர்த்தப்பட்டும்
பதுமைகளாகவே பயன்படுத்தப்படுகிறவர்கள்.

காவல்நிலையங்களையும் சிறைச்சாலைகளையும்
கொலைக் களமாக்கியவர்கள் கடைசியில்
பொதிகை நதி—பொருநை—தன் பொருநை
என்றெல்லாம் பெருமைப்பட்டுக் கொண்டிருந்த
தாமிரபரணியையும்...

—பாரதியன்.

புளுகா புளுகா எங்கடா போனன்னானாம்
பொண்டாட்டி செத்த எழவுக்கு போனேன்னானாம்
— அமைச்சரின் அறிக்கை.

எரியற வூட்ல புடுங்கினது லாபம்
— பத்திரிக்கைகள்.

அறுக்கமாட்டாதவன் சூத்துல
ஐம்பத்தெட்டு கருக்கருவாளாம்
— பிணங்களை கணக்கிட வந்த
மனித உரிமை கமிஷன்.

விளக்குமாத்து கட்டைக்கு பட்டு குஞ்சம்
— நிர்வாண கொடிமரத்தில்
ஏறிஇறங்கும் தேசியக்கொடி.

அடக்குமுறைக்கு உடந்தையாய்
மௌன சாட்சிகளாக
மதில்சுவர்கள்.
பழிகளை சுமந்த
நிராயுதபாணிகளாய் கைதிகள்.

—மம்முட்டியான்


# செப்டம்பர் 17ம், சிறையும்

கேவுருல நெய்வடியுதின்னா
கேப்பாருக்கு மதியெங்கு போச்சு
— பேதியில செத்தானாம் கைதி.

சூத்துமேல அடிச்சானாம்
பல்லு விழுந்து போச்சாம்
— நின்றபடியே தூக்கில் தொங்கும் பிணம்.

வினை விதச்சவன் வினையறுப்பான்
— தீயில் கருகிப்போன ஜெயிலர்.

தேனழிச்சவன் புறங்கை நக்குவான்
— ஆட்சியில்,
பிச்சையெடுத்தானாம் பெருமாளு
அத புடுங்குனானாம் அனுமாரு
— சிறை அதிகாரிகள்.



படிப்பகம்

www.padippakam.com



# ஈழ ஆதரவாளர்களுக்கு தூக்கு: தேசிய இன ஒடுக்குமுறையின் அங்கமே

தூக்கு மரத்தின் நிழலில் நான்கு ஈழஆதரவாளர்கள். தூக்கு தண்டனை விதிக்கப்பட்டவர்களைச் சுற்றி விடுதலைக்கு போராடும் இந்திய தேசிய இனங்கள், மத்திய-மாநில அரசுகளின் கைகளில் தூக்குக் கயிற்றின் விசை. இனம், மொழி, விடுதலை குறித்த மக்களின் கண்ணோட்டத்தை மாற்றிக் கொள்ள மிரட்டுகிறது அரசு.

முருகன், நளினி, சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகிய நான்கு பேரில் இருவர் ஈழத்தமிழர்கள். மற்றிருவர் தமிழகத்தைச் சேர்ந்தவர்கள். இந்த நான்கு பேருக்கும் உச்சநீதிமன்றம் மரணதண்டனையை உறுதி செய்துள்ளது. இவர்களுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை என்பது அரசியல்ரீதியாகவோ, இந்திய சட்டங்களின்படியோ எந்த விதத்திலும் நியாயமற்றது என்பது ஒரு வகைவாதம். மற்றொருபுறம், இந்திய அரசுக்கோ, நீதிமன்றங்களுக்கோ யார் ஒருவருக்கும் மரணதண்டனை அளிப்பதற்கு எந்த அருகதையும் கிடையாது.

முன்னாள் பிரதமர் இராசீவ் காந்தி கொலை விசாரணை ஆரம்பம் முதலாகவே மிகப்பெரிய சதியாகத்தான் தீட்டப்பட்டு வருகிறது. இராசீவ் காந்தியின் கொலைக்கான காரணம், கொலை செய்தவர்கள் மற்றும் உடந்தையாக இருந்தவர்கள், சதி செய்தவர்கள் பற்றி எந்தத் தீர்மானகரமான முடிவுகளும் வெளியிடப்படவில்லை. இராசீவ் கொலை சம்பந்தமாக போடப்பட்ட ஜெயின் கமிஷனின் முழுமையான அறிக்கை கூட இன்னும் வெளிவரவில்லை. இப்பிரச்சினையில் மிக வலிமையோடு எழுப்பப்பட்ட பல சந்தேகங்களை, ஊகங்களை சிறப்பு நீதிமன்ற நீதிபதி நவநீதகிருஷ்ணனும், ஜெயின் கமிஷனும் சந்தேகத்திற்கிடமான முறையில் ஒதுக்கித் தள்ளிவிட்டனர்.

இராசீவ் கொலைச்சதியில் ஈடுபட்டவர்களை மூன்று பிரிவுகளாக பிரித்தனர். அதில் விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரன், பொட்டு அம்மன், அகிலா போன்றவர்களை சதித்திட்டம் தீட்டிய முதல்பிரிவாகவும், சிவராசன், சுபா, தனு, போன்றவர் களை கொலைக்கு பொறுப்பேற்று நேரடியாக நடத்திய இரண்டாவது பிரிவாகவும், மற்ற முருகன், நளினி, சாந்தன், பேரறிவாளன் ஆகிய 26 பேர் உள்ளிட்டவர்களை கொலைக்கு உடந்தையாக இருந்த மூன்றாவது பிரிவாகவும் பிரித்துள்ளனர்.

இவர்களுடைய இத்தகைய பிரிவின்படியே பார்த்தாலும் கூட சட்டப்படி இந்நால்வருக்கு தூக்குதண்டனை செல்லாது என்பது உறுதியாகிறது. மேலும், இதில் முதல் பிரிவினரை பிடித்து நீதிமன்றத்தில் நிறுத்தி விசாரிப்பது இயலாத காரணத்தால் விட்டுவிட்டனர். இரண்டாவது பிரிவைச் சேர்ந்தவர்கள் இறந்து விட்டதனால் அவர்களையும் விட்டுவிட்டனர். தற்பொழுது கையில் சிக்கியவர்களை வைத்துக் கொண்டு, அவர்களையே முதல்நிலை குற்றவாளிகளாக மாற்றி தடா சட்டத்தின் கீழ் இரகசிய விசாரணைகளை தங்களுக்குள்ளேயே நடத்தி நீதிபதி நவநீதகிருஷ்ணன் 26 பேருக்கும் தூக்குதண்டனை வழங்கினார். இருபத்தியாறு பேரின் மீதும் கொடிய, கருப்பு பாசிச சட்டமான தடாசட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அடித்து, சித்திரவதை செய்யப்பட்டு வலுக்கட்டாயமாக பெறப்பட்ட வாக்குமூலங்களை மட்டுமே வைத்துக் கொண்டுதான் இம்மரணதண்டனை வழங்கப்பட்டுள்ளது. நேரடி சாட்சியங்களோ, ஆதாரங்களோ எதுவுமே இவ்வழக்கில் நிரூபிக்கப்படவில்லை. மேலும், வாங்கப்பட்ட வாக்குமூலங்களில் கூட பல பக்கங்களில் சம்பந்தபட்டவர்களின் கையொப்பம் இல்லை.

நீதிபதி நவநீதகிருஷ்ணன் அப்பட்டமாக சி.பி.ஐ. அதிகாரி கார்த்திகேயனின் ஏஜெண்டாக செயல்பட்டார். இந்நீதிபதியின் நியமனம், இவ்வழக்கை இவர் கையாண்ட விதம், ஆகியவற்றை உட்புகுந்து பார்ப்பவர்கள் காறித்துப்பும் அளவிற்கு மிக கேவலமாக நடைபெற்றுள்ளது. உச்சநீதிமன்றம், இவ்வழக்கு தடாவின் கீழ் பதிவு செய்யப்பட்டிருப்பதே பொருந்தாது என்று கூறியிருப்பதும், இதில் பதினெட்டு பேருக்கு தூக்கு தண்டனை கொடுத்ததற்கு சிறு அடிப்படையும் இல்லை என்று வியந்து விடுதலை செய்ததும் நீதிபதி நவநீதகிருஷ்ணனின் உள்நோக்கத்தையும், சதித்தனத்தையும் அம்பலப்படுத்த போதுமானவையாக உள்ளன. "நூறு குற்றவாளிகள் தப்பிக்கலாம், ஆனால் ஒரு நிரபராதி தண்டிக்கப்படக்கூடாது" என்பதே இந்திய சட்டத்தின் சாராம்சம் என பீற்றிக்கொள்ளும் இவர்கள் கணக்குப்படியே ஒரு நீதிபதி பதினெட்டு நிரபராதிகளுக்கு தூக்கு தண்டனை விதித்துள்ளார். இந்த நீதிபதி மீது எந்த கிரிமினல் நடவடிக்கையும், விசாரணையும் மேற்கொள்ளவில்லை. இந்திரா காந்தி கொலைவழக்கில் இருவருக்கு தூக்கு கொடுத்த நீதிபதி இன்றைக்கு அத்தகைய தண்டனை கொடுத்தது தவறு. நீதிமன்றம் தலைகுனிய வேண்டிய தீர்ப்பு அது என்று கூறுகிறார். வாழ்க இவர்களது ஜனநாயகம்! வளர்க இவர்களது சட்டம்!

தடா சட்டமே இவ்வழக்கில் பொருந்தாது என்று தீர்ப்புக் கூறிய உச்சநீதிமன்ற மூவர் குழு, ஆனால் அந்த சட்டத்தின் அடிப்படையில் பெறப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

வாக்குமூலங்களை ஆதாரமாக்கிக் கொண்டு நால்வருக்கு ஆயுள் தண்டனையையும், நால்வருக்கு தூக்கு தண்டனையையும் உறுதி செய்துள்ளது.

இராசீவ் காந்தியை கொலை செய்தவர்களுக்கு உடந்தையாக இருந்தவர்களை தூக்கிலிட வேண்டியது சரியானது, அது தான் இவர்களின் சட்டமென்றால், அமைதிப்படை என்ற பெயரில் இந்திய இராணுவம் ஈழத்திற்குள் புகுந்து பல அப்பாவித் தமிழர்களை படுகொலை செய்ததற்கும், பெண்களை பாலியல் பலாத்காரம் செய்ததற்கும், அவர்களின் வாழ்வையும், உடமைகளையும் சூறையாடியதற்க்கும் காரணமானவனும், சதித்திட்டம் தீட்டிக் கொடுத்தவனுமான இராசீவ் காந்தியை கொலை செய்ததும் சரியானது தானே. அது தானே அவர்களின் சட்டமாகவும் இருக்கமுடியும்.

இந்திய நீதிமன்றங்களை பொறுத்தவரை, அது பகத்சிங்கிற்கும், இராஜகுருவிற்கும், சுகதேவிற்கும் தூக்கு தண்டனை வழங்கிய வெள்ளை நீதிமன்றங்களின் வாரிசு. `அவசரநிலை' என்ற பெயரில் பாசிச ஆட்சியை கட்டவிழ்த்து விட்டு கோடிக்கணக்கான இந்திய மக்களின் வாழ்வை சூறையாடிய இந்திரா காந்திக்கு தூக்கு தண்டனை வழங்காது; இந்திரா மரணத்தை தொடர்ந்து நாடு முழுவதும் ஆயிரக்கணக்கில் சீக்கியர்களை நரவேட்டையாடிய காங்கிரஸ் தலைவர்கள் பகத்திற்கும் மற்றவர்களுக்கும் தூக்கு தண்டனை வழங்காது; யூனியன் கார்பைடு என்ற அமெரிக்க நிறுவனம் எத்தகைய பாதுகாப்பு முறைகளையும் கடைபிடிக்காமல் ஆயிரக்கணக்கான போபால் மக்கள் விஷவாயு தாக்கி சாகடிக்க அனுமதி வழங்கிய இராசீவ் காந்திக்கு தூக்கு தண்டனை வழங்காது; கோடிக்கணக்கில் மக்கள் வரிப்பணத்தை சூறையாடிய ஊழல் பெருச்சாளிகள் முன்னாள் மத்திய அமைச்சர் சுக்ராமுக்கும், முன்னாள் பிரதமர் நரசிம்மராவுக்கும், அவன் மகனுக்கும், ஹவாலா மோசடி பேர்வழிகளுக்கும், பீகார் முதல்வர் லல்லு பிரசாத் யாதவிற்கும், ஜெயலலிதாவிற்கும் தூக்கு தண்டனை வழங்காது; `ரதயாத்திரை' என்ற பெயரில் இசுலாமியருக்கு எதிரான வெறியாட்டத்தை தூண்டி நாடுமுழுவதும் லட்சக்கணக்கான இசுலாமியர்களை கொன்றும், பெண்களை மானபங்கப்படுத்தியும், சொத்துக்களை அழித்தும் இந்து மத பாசிசத்தை கட்டவிழ்த்து விட்ட அத்வானி, வாஜ்பேயி, கல்யாண்சிங்கிற்கு தூக்கு தண்டனை வழங்காது; உண்மைகளை மூடிமறைத்து அரசு எந்திரத்தை பாதுகாக்க ஆட்டோ சங்கருக்கு தூக்கு வழங்கியும், ஆத்திரத்தில் உடன்பிறந்தவர்களை, மனைவி, மக்களை கொலை செய்துவிட்டு வேதனையுறும் ஏழைகளுக்கு தூக்கு வழங்கியும் தனது நீதி பரிபாலனத்தை நிலைநாட்டும்.

உண்மையில் இராசீவ் கொலை என்பது, பிறநாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுபவர்களும், தேசிய விடுதலை போராட்டத்தை நசுக்க நினைப்பவர்களும் படிப்பினையாக எடுத்துக் கொள்ளவேண்டிய பாடம். பிரச்சினைகளை சரியான கோணத்தில் புரிந்து கொண்டு பாடம் கற்றுக் கொள்ளாமல் இத்தகைய பழிவாங்கும் போக்கில் அரசு நடப்பது, மீண்டும் பல தலைகளை இழப்பதற்கே இட்டுச் செல்லும்.

நால்வருக்கு மரணதண்டனையை உச்சநீதிமன்றம் உறுதி செய்தவுடன் போடப்பட்ட மறுபரிசீலனை மனுவும் நிராகரிக்கப்பட்ட நிலையில், கருணை மனு போடப்பட்டுள்ளது, தமிழக ஆளுநர் பாத்திமாபீவியோ என்ன? ஏது? என்று கூட பார்க்காமல், கருணை மனு விசயத்தில் கடைபிடிக்க வேண்டிய சட்டமுறைகளை பற்றிக் கூட கவலைப்படாமல் நிராகரித்ததை தொடர்ந்து, அதற்கு எதிராக வழக்கு தொடரப்பட்டது. உலகத்தின் கண்களுக்கு தாங்கள் எல்லாவற்றையும் சட்டப்படிதான் செய்கிறோம் என்று காட்டிக்கொள்வதற்காக ஆளுநர் தீர்ப்பை விசாரித்துள்ளது நீதிமன்றம்.

உலகத்தமிழினத்தின் ஒரே ஒப்பற்ற தலைவரான கருணாநிதியோ இப்பிரச்சினையை கைகழுவி விடுவதிலேயே குறியாக இருக்கிறார். கருணை மனு விசயத்தில் மாநில அரசின் அதிகாரம் சம்பந்தப்பட்ட விசயத்தை மூடிமறைப்பதன் மூலம் மரணதண்டனைக்கு துணைபோவதையே தனது அரசியல் நிலைப்பாடாக்கிக் கொள்கிறார். மதிமுக-வின் வைகோ, பாமக-வின் இராமதாசு போன்றவர்கள் தங்கள் வாய்த்திறமைகளை காட்டி பிரச்சினையிலிருந்து நழுவிக் கொள்வதன் மூலம் மரணதண்டனைக்கு துணைபோகவே விரும்புகிறார்கள்.

இதற்கிடையே, இத்தனை நாளும் இப்பிரச்சினையை வெறும் சட்ட வரையறைக்குள்ளேயே தீர்த்துக் கொள்ள நடந்த அனைத்து முயற்சிகளும் தோல்வியுற்றபின், மீண்டும் கருணை மனு கொடுத்து அதன் மீதான நம்பிக்கைகள் உருவாக்கி வளர்க்கப்பட்டு வருகிறது. இது கடைசியில் புத்தாயிர மாண்டின் அடிப்படையிலாவது மரண தண்டனை குறைக்கப்படும் என்ற நம்பிக்கை வரை இழுத்துச் செல்லப்படுகிறது.

நால்வர் தூக்குதண்டனையை பொறுத்தவரை சட்டப்படி விசாரணை என்பதெல்லாம் பெயருக்குத்தான். கட்டப் பஞ்சாயத்து போல் நடத்தப்பட்டுத்தான் 26 பேர் என்பது 4 பேராக குறைக்கப்பட்டுள்ளது. இந்திய அரசு பழிக்குப்பழி வாங்க வேண்டும், யாரேனும் நான்கு பேருக்காவது தூக்கு தண்டனை அளித்து தன்னுடைய அதிகாரத்தை நிலைநாட்டவேண்டும். மேலும் முக்கியமாக, "அரசன் எவ்வழியோ மக்கள் அவ்வழிதான்" செல்லவேண்டும்; புலிகளையும், ஈழத்தையும் ஆதரிப்பதை அரசு நிறுத்திவிட்டால், மக்களும் மக்கள் இயக்கங்களும் நிறுத்திவிட வேண்டும் என்பதை தமிழக மக்களுக்கு மட்டுமல்லாமல் இந்திய மக்கள் அனைவருக்கும் மிரட்டி புரிய வைக்கத்தான் இக்கொலையை அரங்கேற்ற நினைக்கிறது.



படிப்பகம்

இதனைப்புரிந்து கொண்டு மக்கள் இயக்கங்களை போர்குணமிக்க வகையில் நாம் கட்டியமைக்க வேண்டும். இந்திரா காந்தி கொலைவழக்கில் தூக்குதண்டனை நிறைவேற்றப்பட்டவர்களை பாதுகாக்க அங்கே எழுப்பப்பட்ட பிரம்மாண்டமான மக்கள் இயக்கங்களுக்கும், போராட்டங்களுக்கும், தர்ணாக்களுக்கும், பந்த்களுக்கும் கூட இந்திய அரசு எப்படி பணிய மறுத்தது என்ற வரலாற்றிலிருந்து பாடம் கற்று மேலும் தெளிவோடு முன்னெடுத்துச் செல்லவேண்டும். ஈழவிடுதலையையும், ஈழ விடுதலைக்கு ஆதரவான தமிழக மனப்போக்கையும் நாம் பாதுகாத்து, ஆதரித்து முன்கொண்டு செல்வது என்பது தமிழகத்தில் ஒரு புரட்சிகர இயக்கத்தை கட்டுவதில்தான் உள்ளடங்கியுள்ளது என்பதை நாம் மிகத் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டிய தருணமிது.

இந்தியஅரசு மக்களின் இனம், மொழி, வர்க்கம், விடுதலை குறித்த சிந்தனைகளை, படுகொலைகள் மூலமும், சட்டமிரட்டல்கள் மூலமும், பாசிச நடவடிக்கைகள் மூலமும், உள்நாட்டு யுத்த அபாயங்கள் மூலமும், சீரழிவு கலாச்சாரங்கள் மூலமும் நசுக்கிவிட முடியும் என்று கருதுகிறது. அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கைதான் முருகன், நளினி, சாந்தன், மற்றும் பேரறிவாளனுக்கு விதிக்கப்பட்டுள்ள மரணதண்டனை என்று உரக்கக்கூறுவோம்.

மத்திய-மாநில அரசுகளுக்கோ, இந்திய நீதிமன்றங்களுக்கோ யாருக்கும் தண்டனை வழங்கும் அதிகாரமோ, யோக்கியதையோ கிடையாது. எத்தகைய கொலை மிரட்டல்களாலும் மக்களது, மக்கள் இயக்கங்களது போராட்ட உணர்வை மழுங்கடிக்க முடியாது. வர்க்கங்களுக்கு எதிரான படுகொலைகள் வர்க்க உணர்வுகளை கூர்மைபடுத்தும், இனங்களுக்கு எதிரான படுகொலைகள் இன உணர்வுகளை கூர்மைபடுத்தும் என்ற வரலாற்று உண்மையை இந்திய மக்களின் எதிரிகளுக்கு புரியவைப்போம்.

மத்திய-மாநில அரசுகளே!

★ முருகன், நளினி, சாந்தன் மற்றும் பேரறிவாளனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை திரும்பப்பெறு!

★ ஆயுள்தண்டனை மற்றும் மரணதண்டனை விதிக்கப்பட்ட 8 பேரையும் உடன் விடுதலை செய்!

★ ஈழ ஆதரவு போராட்டத்தை ஒடுக்காதே!

★ விடுதலைப்புலிகள் மீதான தடையை நீக்கு!

– கிருஷ்ணன்

## தோழர். இரவீந்தரின் படுகொலையைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

பாசிச கருணாநிதி அரசால் சனவரி 10ஆம் நாள், தருமபுரியில் 'மோதல்' என்ற பெயரில் கொடூரமான முறையில் கோழைத்தனமாக தோழர். ரவீந்தர் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்தும், ஐயாயிரத்திற்கும் மேற்பட்ட போலீசார் மற்றும் அதிரடிபடையினரைக் குவித்து 'சோதனை' என்ற பெயரில் கிராமங்களைச் சூறையாடியும், நூற்றுக்கணக்கான பொதுமக்கள் மற்றும் தோழர்களை பொய் வழக்கில் கைது செய்தும் காட்டுதர்பார் நடத்திவரும் காவல்படையை திரும்பப் பெற கோரியும், பா.ஜ.க. தி.மு.க.வின் அரசு பயங்கரவாதத்திற்கு எதிராகவும் முற்போக்கு மாணவர்சங்கம், முற்போக்கு இளைஞர் அணி, மக்கள் பண்பாட்டுப் பேரவை, மக்கள் ஜனநாயக இளைஞர் கழகம், தமிழக மாணவர் முன்னணி, தமிழ்தேச பொது உடைமைக் கட்சி, புரட்சிகர இளைஞர் முன்னணி, தமிழக ஒடுக்கப்பட்டோர் விடுதலை இயக்கம், இ.க.க.(மா-லெ) செங்கொடி, மக்கள் உரிமை பாதுகாப்புக்குழு ஆகிய அமைப்புகள் இணைந்து பிப்.8ஆம் நாள் சென்னையில் ஆர்ப்பாட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டது. பேரணி, ஆர்ப்பாட்டம் என்ற பெயரில் ஓட்டுக்கட்சியினர் நடத்தும் அனைத்து அராஜகங்களுக்கும் முழு ஒத்துழைப்பு வழங்கும் காவல்துறை, இந்த ஆர்ப்பாட்டத்திற்கு ஒலி பெருக்கி வைத்துக் கொள்ளும் குறைந்த பட்ச சனநாயகத்தைக் கூட மறுத்துவிட்டது. பிப்.8ஆம் நாள் காலை 10.00 மணி அளவில் தி.நகர் பனகல் பூங்கா அருகில் தியாகி.தோழர். இரவீந்தருக்கு அஞ்சலி செலுத்தி "தியாகிகளுக்கு அஞ்சலி" பாடலுடன் ஆர்ப்பாட்டம் தொடங்கப்பட்டது. தோழர். கோவை ஈஸ்வரன் கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் மு.மா.ச. சார்பில் தோழர். பாலன், ம.ஜ.இ.க. சார்பில் தோழர். ஞானம், த.ஒ.வி.இ. சார்பில் தோழர். கயல், இ.க.க. (மா-லெ) செங்கொடி சார்பில் தோழர். நீண்ட பயணம் சுந்தரம், த.மா.மு. சார்பில் தோழர். வில்லியம், த.நா.மா.லெ.க சார்பில் தோழர். கல்விச் செல்வன் ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினார்கள். பாசிச பா.ஜ.க. தி.மு.க. அரசுகளின் 'போலி மோதல்' படுகொலைகளுக்கான நோக்கத்தை அம்பலப்படுத்தியும், இப்படுகொலைகளுக்கு ஜுனியர்விகடன் போன்ற முதலாளிய பத்திரிக்கைகள் தளம் அமைத்துக் கொடுப்பதை கண்டித்தும், தோழர். இரவீந்தரின் தியாகத்தை உயர்த்தி பிடித்தும், படுகொலைக்கு நீதிவிசாரணை கோரியும் தோழர்கள் உரை நிகழ்த்தினார்கள். ஆர்ப்பாட்டம் முழுவதும் "கருணாநிதி ஆட்சியின் அரசு பயங்கரவாதம் ஒழிக", "தியாகிகள் கனவை நனவாக்குவோம்" போன்ற முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

www.padippakam.com

# 47க்கு பிந்தைய உழவர் போராட்டங்கள் – II

*(நாற்பத்தியேழுக்கு பிந்தைய காலகட்டத்தில் நடைபெற்ற விவசாயப் போராட்டங்கள் பற்றிய தொடரை வெளியிட்டு வருகிறோம். இதன் முதல் பகுதியாகிய `தேபாகா இயக்கம்' குறித்த கட்டுரை கடந்த இதழில் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆந்திராவில் நடைபெற்ற மாபெரும் தெலுங்கானா போராட்டம் குறித்த கட்டுரையை இவ்விதழில் வெளியிடுகிறோம்.)*

## தெலுங்கானா போராட்டம்

1946ம் ஆண்டு முதல் 1951ம் ஆண்டுவரை நடந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தெலுங்கானா ஆயுதமேந்திய போராட்டமானது விவசாயப் புரட்சிக்காக உழவர்களை அணிதிரட்டிய கம்யூனிச புரட்சியாளர்களின் முதல் முயற்சியாக இருந்தது. மேலும் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் இருந்த காங்கிரசுடன் சமரசம் மற்றும் கூட்டு ஆகிய போக்கிற்கு எதிரான புரட்சிகர வழியின் வெற்றியை பிரதிநிதித்துவப்படுத்தும் வண்ணமாகவும் அமைந்தது.

எட்டு மாவட்டங்களை உள்ளடக்கிய தெலுங்கானா, நிஜாமினால் ஆளப்பட்ட ஹைதராபாத் மாநிலத்தின் பகுதியாக இருந்தது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ், நிலவுடமை சக்திகளால் ஆளப்பட்ட மிகப்பெரிய முடியாட்சி பிரதேசமாக அது இருந்தது.

அம்மாநிலத்தின் சமுதாய மற்றும் பொருளாதார கட்டமைப்பானது பெருவாரியான விவசாயிகளை கொடூரமாக ஒடுக்கும் வகையில் இருந்தது. விவசாய நிலங்களில் மூன்று பங்கு நிலத்தை நிஜாம்களிடமிருந்து ஜாகீர்தார்கள் குத்தகைக்கு வாங்கி வைத்திருந்தனர். இதற்கு கைமாறாக ஜாகீர்தார்கள் நிஜாமுக்கு பணமும், படையும் ஏற்பாடு செய்து தர வேண்டும். ஜாகீர்தார்களை எந்த நீதிமன்றமும் தண்டிக்க முடியாது. அவர்கள் விவசாயிகளிடமிருந்து தன்னிச்சையாக வாடகையை பிடுங்கினர். மேலும் விவசாய குத்தகைதாரர்களிட மிருந்து பல்வேறு சட்டபூர்வமற்ற முறையிலான சுரண்டல்களை மேற்கொண்டனர்.

மேலும், மன்னர் நிலங்கள் இருந்தன. அவற்றிற்கு நிஜாம்தான் நேரடியாக வருவாயை வசூலிப்பவராக இருந்தார். மீதம் உள்ளதில் 60விழுக்காடு நிலம் பெயருக்கு விவசாயிகளுடையதாக இருந்தது. அவற்றை முழுவதுமாக அனுபவித்தவர்கள் நிஜாம் மற்றும் அவனுடைய அதிகாரிகளாகத்தான் இருந்தனர். இருந்த போதிலும், தேஷ்முக்குகளும், தேஷ்பான்களும் வருவாயை பரம்பரை யாக வசூல் செய்யும் தொழிலை கொண்டவர்களாக இருந்தனர். இவர்களுக்கு வசூலித்த வருவாயில் `வதன்' அல்லது குறிப்பிட்ட விழுக்காடு தரப்பட்டது. நிலங்களின் மீதான ஆவணங்களில் அவர்களின் கட்டுப்பாடு இருந்ததால் அவர்கள் நிலப்பிரப்புக்களாக மாறிவிட்டனர். அவர்கள் மோசடி செய்து நிலங்களை பிடுங்கினர் அல்லது நிலத்திற்கு சொந்தக்காரனான விவசாயியை குத்தகையாளராகவோ அல்லது நிலமற்ற கூலி ஏழையாகவோ ஆகும் நிலைக்கு தள்ளினர். ஜாகீர்தார்களும், தேஷ்முக்குகளும் `தோராஸ்' அல்லது `முஸ்லர்' என பரவலாக அழைக்கப்பட்டனர். இவர்கள் ஏழைகளிடமிருந்தும், கடனாளியானவர்களிட மிருந்தும் கட்டாயமாக `வெட்டி' என்று சொல்லப் படக்கூடிய இலவச வேலை செய்ய வைத்து உழைப்பினை திருடினர்.



இரண்டாம் உலகப் போர் கால கட்டத்தின் போது விவசாயிகளின் மீதான சுமை பலவிதங்களில் அதிகரித்து வந்தது. நிலமற்ற கூலிவிசாயிகளின் எண்ணிக்கை குறிப்பி டத்தக்க அளவில் அதிகரித்தது. கூலியோடு ஒப்பிடுகை யில் உணவு பண்டங்களின் விலை கடுமையாக அதிகரித் தது. மேலும் பெரிய அளவிற்கு உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டது. இது பணப் பயிர்களை பயிரிடும் போக்கு பரவலாக வளர்ந்த தன் விளைவே. இந்த நெருக்கடியை சமாளிக்க அரசாங்கமானது ரேஷன் முறையையும், விவசாயிகளிடமிருந்து உணவு தானியங்களை கட்டாய வரி யாக வசூலித்ததும் மேலும் அதிருப்தியையே அதிகப் படுத்தியது.

## இந்திய கம்யூனிஸ்ட் கட்சி வேர்விடுதல்

நிஜாமின் அடக்குமுறை ஆட்சி வெளிப்படையான அரசியல் நடவடிக்கைகளுக்கு மிகச்சிறிய அளவிலேயே அனுமதித்தது. அதனால் அதிருப்தியானது கலை இலக்கிய வடிவத்தை எடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. 1928ம் ஆண்டு துவங்கப்பட்ட `ஆந்திர மாநாடு' என்ற அமைப்பு தெலுங்கானா மாவட்டத்தில் இயங்கியது. இந்த அமைப்பானது நிர்வாக மற்றும் அரசியல் சாசன, சீர்திருத்தம், பள்ளிகள், பணிகளுக்கு ஆளெடுப்பு மற்றும் பிராந்திய பொருளாதார வளர்ச்சி `கலாச்சார' கோரிக்கைகள் ஆகியவற்றிற்காக இயக்கம் நடத்தியது. இரண்டாம் உலகப்போரின் போது ஆந்திர மாநாடு `வெட்டி' என்று சொல்லக்கூடிய கட்டாய இலவச வேலைமுறை பிரச்சனையை கையிலெடுத்து கிராமப் புறங்களிலும் தனது அடித்தளத்தை விரிவு படுத்தியது. அதே நேரத்தில் ஆந்திராவில், தெலுங்கு பேசக்கூடிய அனைத்துப் பகுதிகளையும் இணைக்க வேண்டும் என்று ஆந்திர மகாசபாவால் `விஷால் ஆந்திரப் போராட்டம்' நடைபெற்று வந்தது. இந்த அமைப்பு தெலுங்கானாவிலும் பரவியது.

1938ம் ஆண்டு காங்கிரஸ் மற்றும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை தடை செய்த பின்னர், இவைகளே முன்னணி அமைப்புகளாக விளங்கியன. கம்யூனிஸ்ட்கள், குறிப்பாக வேகமாக வளர்ந்தனர். ஆந்திர மாநாடு அமைப்பில் இருந்த முற்போக்கு இளைஞர்கள் கலாச்சார அமைப்பையே நிஜாம் அரசாங்கத்திற்கெதிரான இளைஞர்கள், விவசாயிகள், நடுத்தரவர்க்கம் மற்றும் தொழிலாளர்களின் போர்க்குணமிக்க வெகுஜன இயக்கமாக மாற்றினர். ஆந்திர மகாசபா அமைப்பிலும் முதல் கட்டத்தில் ரவி நாராயணரெட்டி மற்றும் பதன்யெல்லா ரெட்டி ஆகிய இரண்டு இளம் கம்யூனிஸ்ட்கள் தாம் முறையே தலைவராகவும், செயலராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

ஆந்திர மாநாட்டின் 'சங்கம்' என்று அழைக்கப் பட்டஉள்ளூர் கிளைகள் உழைப்பாளிகளுக்கு அதிக கூலிக்காகவும், வெட்டிவேலை முறைக்கு எதிராகவும், வெளியேற்றல் மற்றும் பல்வேறு பிரச்சனைகளுக் காகவும் கிராம அளவில் போராட்டங்களை நடத்தின. இத்தகைய போராட்டங்கள் முதலில் நல்கொண்டா மாவட்டத்து கொடிய பண்ணையார்கள் மற்றும் தேஷ் முக்குகளுக்கு எதிராக தொடங்கியது. விவசாயிகளின் நடவடிக்கைகளானது பலவந்தமாக நிலத்தை பண்ணைகளிடமிருந்து பிடுங்குவது, வெட்டி வேலை செய்யமறுப்பது, வரிவசூல் செய்வதை எதிர்ப்பது ஆகிய வடிவங்களில் காணப்பட்டது. தெலுங்கானா எழுச்சியும் இத்தகைய ஒரு போராட்டத்தின் மூலமாகத்தான் துவங்கியதாக சொல்கிறார்கள். 1946ம் ஆண்டு ஜீலை மாதம் ஆயிரக்கணக்கான விவசாயிகள் கம்புகள் மற்றும் கவன்கற்களுடன் மக்களால் வெறுக்கப்படும் விஷ்ணு தேஷ்முக்கை எதிர்த்து ஊர்வலம் நடத்தினர். பண்ணையாரின் குண்டர்கள் கிராம சங்கத் தலைவரான தொட்டி குமணய்யா என்பவரை சுட்டுக் கொன்றனர். கோபமடைந்த மக்கள் திரள் பண்ணையாரின் வீட்டை தாக்கியது. அது முதல் தெலுங்கானா போராட்ட நெருப்பு பரவ தொடங்கியது. எழுச்சியின் இந்த கட்டத்தில் விவசாயிகளிடம் ஆயுதங்களோ தேவையான கெரில்லா அமைப்போ இல்லை.

1947ம் ஆண்டு, பிரிட்டிஷார் சமஸ்தானங்கள் எல்லாம் இந்தியா அல்லது பாகிஸ்தானுடன் சேர்ந்து கொள்ளவோ அல்லது சுதந்திரமான சமஸ்தானங்களாகவோ இருந்து கொள்ளலாம் என்று அறிவித்தனர். ஜாமும், மஜ்லீஸ்-ஈ-இதிகாத் என்ற முசுலீம் மதவாத அமைப்பும் சுதந்திரமான ஹைதராபாத் மாநிலம் இருக்க வேண்டும் என்று விரும்பினர். ஆனால் மற்ற பிரிவினரில் அனைத்து முற்போக்காளர்களின் எண்ணமும் நிஜாமை தூக்கியெறிந்துவிட்டு இந்தியாவுடன் இணைய வேண்டும் என்று இருந்தது. கம்யூனிஸ்டுகள் கூட காங்கிரசுடன் இணைந்து இந்தியாவுடன் சேர சத்தியாகிரகம் நடத்தி கொண்டிருந்தனர்.

***தளங்களின் வளர்ச்சி***

கம்யூனிஸ்டுகள் வளர்ந்து வருவதை கண்ட நிஜாம் காவல் துறையின் அடக்குமுறையை மட்டுமல்லாது, கம்யூனிஸ்டுகளை முறியடிக்க முசுலீம் மதவெறியையும் பயன்படுத்தினான். கதீம் ரஜ்வி என்பவரால் அணிதிரட்டப்பட்ட 10,0 000 உறுப்பினர்களை கொண்ட ரஜாக்கர்கள் என்ற தன்னார்வ இராணுவ அமைப்பினரின் நடவடிக்கைகளை நிஜாம் ஊக்குவித்தார். எங்கெல்லாம் விவசாயிகள் கிளர்ச்சியடைந்து போராடுகிறார்களோ அங்கெல்லாம் அதனை அடக்க இந்த மதவெறிகும் பலை போலீசுடனோ அல்லது தனியாகவோ அனுப்பி னான் நிஜாம். இந்த ரஜாக்கர்கள் கிளர்ச்சி செய்யும் கிராமங்களை சூறையாடியும், கொள்ளையடிக்கவும் செய்தனர். புரட்சியாளர்கள் என சந்தேகிப்போரையும், கிராம அமைப்பாளர்களையும் கைது செய்வது மற்றும் கொலை செய்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர். மேலும் பீதியை ஏற்படுத்த பெண்களை பாலியல் பலாத்காரம் செய்தும் வந்தனர். இந்த மதவெறி கும்பல்களை முறியடிக்க கம்யூனிச புரட்சியாளர்களால் முதல் ஆயதமேந்திய படை அல்லது தளத்தை அமைத்தனர். இது அணிதிரட்டப்பட்ட ஆயுதமேந்திய கிளர்ச்சி என்ற புதிய நிலைக்கு செல்ல வழி கோரியது. 1949ம் ஆண்டு நல்கொண்டா, வாரங்கல் மற்றும் கம்மம் ஆகியவற்றை மையப்படுத்தி குழுவிற்கு 20 போராளிகளை உள்ளடக்கிய 6 பகுதி குழுக்களை உருவாக்கினர். 50 முதல் 60 வரை கிராமப் படைகளையும் நிறுவினர். இந்த கெரில்லாக் குழுக்கள், ரஜாக்கர் கும்பலை தீவிரமாக எதிர்த்தது. அடிக்கடி அவர்களுடைய ஆயுதங்களையும் கைப்பற்றியது. விவசாயிகளிடமிருந்து வரி வசூலிக்கிறோம் என்று சொல்லி தானியங்களை கொள்ளையடிக்கும் சுங்க சாவடிகளையும் தளத்தை சேர்ந்த போராளிகள் அடித்து நொறுக்கினர். கொரில்லா குழுவுக்க மக்கள் பல்வேறு விதங்களில் உதவி செய்தனர். ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமம் செல்ல, வீடு, சாப்பாடு மற்றும் அவர்களுக்கு பாதுகாப்பு இடங்கள் ஆகியவற்றை மக்களே ஏற்பாடு செய்தனர். மேலும் எதிரியின் நடமாட்டத்தைப் பற்றிய தகவலையும் மக்கள் தந்தனர். ஆயிரக்கணக்கான சாதாரண விவசாயிகள் நிஜாம் படைகளின் முன்னேற்றத்தை தடுப்பதற்காக ரோடுகளை வெட்டுவதில் ஈடுபட்டனர். மேலும் நிலப்பிரபுக்களின் கோட்டைகளை தாக்கும் போதும் விவசாயிகள் கலந்து கொண்டனர்.

***கிராம ராஜ்ய கட்டம்:***

தெலுங்கானா போராட்டமானது அடக்குவோரின் அதிகாரத்தை தூக்கி எறிந்துவிட்டு அந்த இடத்தில் மக்கள் அதிகார அரசை நிறுவியதன் மூலம், ஒரு சரியான புரட்சிகர வடிவத்தை கொண்டிருந்தது. அதிகார மாற்றத்தின் போது ஏற்பட்ட குழப்பத்தை பயன்படுத்திக் கொண்டு புரட்சியாளர்கள் கிராமங்களில் சோவியத்துக்கள் அல்லது கிராமராஜ்யத்தை சுமார் 4000 கிராமங்களில் அமைத்தனர். இது 3 மில்லியன் மக்கள் தொகையும், 16000 சதுர அடி பரப்பளவையும் கொண்டதாக இருந்தது. இந்த கிராமத்திலிருந்த பண்ணையார்கள் அவர்களின் கோட்டையான வீடுகளிலிருந்து விரட்டப்பட்டனர். சுமார் 1 மில்லியன் ஏக்கர் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டு நிலமற்ற ஏழை விவசாயிகளிடம் பிரித்து தரப்பட்டது.

ஆயுதமேந்திய போராட்டத்தில், மிகவும் மோசமான பண்ணையார்கள் தண்டிக்கப்பட்டனர். மேலும் சில பேருக்கு மக்கள் நீதி மன்றத்தில் மரண தண்டனை அளிக்கப்பட்டது. 12 முதல் 18 மாதங்களுக்கு நல் கொண்டா, வாரங்கல், கம்மம் ஆகிய மாவட்டங்கள் முழுவதாகவும், மேடக், அதிலாபாத் மற்றும் கரீம்நகர் போன்ற மாவட்டங்களின் பகுதிகள் விவசாய கமிட்டியால் ஆளப்பட்டது. கெரில்லா குழு கிராமத்தை தங்கள் கட்டுப்பாட்டின் வைத்து பாதுகாத்தது. உள்ளூரில் எழக்கூடிய பிரச்சனைகளை தீர்ப்பது, ஒருங்கிணைப்பது ஆகிய பணிகளை கிராம சமிதி செய்து வந்தது. கெரில்லா குழுவில் 10000 உறுப்பினர்கள் இருந்தனர். நகரும் சிறப்பு கெரில்லா குழுவில் 7000 வீரர்கள் இருந்தனர்.

(தொடர்ச்சி அடுத்த இதழில்)



படிப்பகம்

www.padippakam.com

(பின் அட்டை தொடர்ச்சி)

உண்மையில், பாசிச வெறியன் சந்திரபாபுநாயுடு நிகழ்த்தி வரும் இப்படுகொலைகள் ஆளும்வர்க்கங்களின் பலத்தை குறிப்பதன்று, மாறாக பலவீனத்தையே காட்டுகின்றது. ஏகாதிபத்தியங்களுக்கு சேவைபுரிவதில் உலக தரகர்களிலே யே முதன்மையானவனாக விளங்குகிறான் சந்திரபாபு. 'ஸ்வர்ணாந்திரா' உருவாக்குவேன் என்ற பெயரில் ஆந்திரா மொத்தத்தையும் ஏகாதிபத்தியங்களுக்கு கூறுபோட்டு விற்று விட்டான். ஏகாதிபத்திய பன்னாட்டு நிறுவனங்கள் ஆந்திராவில் உள்ள வளங்களை கொள்ளையடிப்பதற்கு முழு அனுமதி வழங்கியுள்ளான். `கம்யூட்டர்மயம்' என்ற பெயரில் தேசியத் தொழில்களை முழுவதுமாக நசுக்கிவிட்டான். பன்னாட்டு நிறுவனங்களின் தேவைக்காக உலகவங்கி நிதி மற்றும் அரசு நிதி மூலம் போக்குவரத்து, தொலைதொடர்பு உள்ளிட்ட அனைத்து அடிக்கட்டுமானத்தையும் தேவையான பகுதிகளில் உருவாக்கி வருகிறான். அவனது ஏகாதிபத்திய சேவையை பாராட்டி `மாபெரும் மனிதன்' (?) என அமெரிக்காவில் பட்டம் வழங்கப்பட்டது. அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்டனே பாராட்டும் அளவுக்கு ஏகாதிபத்திய கரசேவையில் தலைமைப் பாத்திரம் வகிக்கிறான். சந்திரபாபுவின் மக்கள் விரோத கொள்கைகளுக்கு எதிராகவும், ஏகாதிபத்திய கொள்ளைக்கு எதிராகவும் தொழிலாளர்கள், விவசாயிகள், மாணவர்கள், பெண்கள், அறிவுஜீவிகள் என அனைத்து பிரிவினரும் போராடி வருகின்றனர். மக்களின் விடுதலைக்காகவும், உழைக்கும் மக்கள் ஆட்சியை நிறுவிடவும் ஆயுதப் போராட்டத்தை முன்கொண்டு செல்லும் மக்கள் யுத்தத்தின் கீழ் கோடிக்கணக்கில் அணிதிரண்டு வருகின்றனர். புரட்சிகர இயக்கத்தின் வளர்ச்சியைக் கண்டு கிலிபிடித்துப் போயுள்ளது ஏகாதிபத்திய - நாயுடு கும்பல். வடதெலுங்கானா, தண்டகாரண்யா கிராமப்புறங்களில் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு எதிராகவும், ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் மக்கள் அணி அணியாக திரள்வதையும், மக்கள் யுத்தத்தின் வழிகாட்டுதலின் கீழ் தங்களின் வாழ்க்கைத் தரத்தை அவர்கள் உயர்த்திக் கொள்வதையும் கண்டு நாயுடு கும்பல் மிரண்டு போயுள்ளது. இம்மிரட்சியின் வெளிப்பாடே நாயுடு-தோரா கும்பல் செய்துள்ள இப்படுகொலைகள்.

**மக்கள் மனங்களில் விதையாகிப் போன தியாகிகள்**

தோழர்கள்ஷ்யாம், மகேஷ், முரளி ஆகியோர் கடந்த 20 முதல் 25 ஆண்டுகளாக மக்களின் விடுதலைக்காக தங்களது முழு வாழ்க்கையையும் அர்ப்பணித்தவர்கள். மக்கள் யுத்தம் உதித்த காலந்தொட்டு உறுதியுடன் புரட்சிகர இயக்கத்தை படிப்படியாக வளர்த்தெடுத்தவர்கள். குறிப்பாக வடதெலுங்கானா, தண்டகாரண்யா புரட்சிகர இயக்கங்களை கெரில்லா மண்டலத்தின் உயர்ந்த கட்டத்தை நோக்கி வளர்த்தவர்கள்.

**தோழர். ஷ்யாம்** - கெரில்லா மண்டலங்கள் கட்டி அமைத்ததில் அடிப்படையாகத் திகழ்ந்தவர். 1970களின் மத்தியில் நக்சல்பாரி இயக்கத்தில் இணைந்து கரீம்நகர் மாவட்டத்தில் புரட்சிகர பணியாற்றினார். 1980இல் கட்சியின் ஆந்திர பிரதேச மாநில குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். பின்னர் 1984இல் மாநிலக் குழு செயலராக உயர்த்தப்பட்டார். 1986 இல் கைதான அவர் 1988இல் சிறையிலிருந்து தப்பிவந்து மீண்டும் புரட்சிகர பணியைத் தொடர்ந்தார். அதன் பின்னர் கட்சியின் மையக்குழு விற்கு தேர்வு செய்யப்பட்டார். புரட்சிகர இயக்கம் நெருக்கடிகளை சந்தித்த போதெல்லாம் அவற்றை தீர்த்து இயக்கத்தை முன் கொண்டு செல்வதில் முக்கிய பங்கு வகித்தார். ஆளும் வர்க்கங்களுக்கு சிம்மசொப்பனமாக விளங்கிய அவர் மக்களுக்கும், புரட்சியாளர்களுக்கும் அன்பிற்குரிய தோழராக விளங்கினார்.

**தோழர். மகேஷ்** - 1980இல் ஓஸ்மானியா பல்கலைக்கழகத்தில் பட்ட மேற்படிப்பு படித்துக் கொண்டிருந்த போது புரட்சிகர அரசியலால் ஈர்க்கப்பட்டு மக்கள் யுத்தத்தில் இணைந்தார். 1984இல் கைது செய்யப்பட்டு பின்னர் விடுவிக்கப்பட்டார். 1986இல் மீண்டும் தடா சட்டத்தில் கைது செய்யப்பட்டு 1991 வரை சிறையிலடைக்கப்பட்டார். விடுதலையாகி மீண்டும் புரட்சிகர பணியை தொடர்ந்தவர், 1992இல் மாநில குழு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். 1995 இல் மாநில குழு செயலராகவும், கட்சியின் அகில இந்திய சிறப்பு மாநாட்டில் மையக்குழு உறுப்பினராகவும் தேர்வு செய்யப்பட்டார். ஆந்திர மாநில புரட்சிகர இயக்கத்தை, கடும் ஒடுக்குமுறைக்கு மத்தியிலும், எண்ணற்ற தோழர்களின் மறைவுக்கு மத்தியிலும் உறுதியுடன் முன்கொண்டு சென்ற போல்ஷ்விக் ஆவார்.

**தோழர். முரளி** - 1981 இல் சிர்சிலாவில் உள்ள பல்தொழில் நுட்பக் கல்லூரியில் பயின்று கொண்டிருந்த போது புரட்சிகர இயக்கத்தில் இணைந்தார். கீழ்நிலையில் இருந்து படிப்படி யாக பொறுப்புகளை அதிகரித்து இறுதியில் வடதெலுங்கானா சிறப்பு மண்டலக்குழுவின் செயலராகவும், மையக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு ஏற்றார். அத்துடன் கட்சியின் இராணுவப்பிரிவுக்கு பொறுப்பாகவும் விளங்கினார். இயக்கத் தில் இணைந்த உடன் குடும்பத்தை விட்டுவந்தவரை அவரது குடும்பத்தினர் மீண்டும்

**மக்கள் இதயங்களில் நிலைத்துவிட்ட தோழர்களின் இறுதி ஊர்வலங்கள்**

மக்கள் விடுதலைக்காக வாழ்ந்து, மறைந்த தோழர்கள். ஷ்யாம், மகேஷ், முரளி ஆகியோரின் இறுதி ஊர்வலத்தை அலைகடலென திரண்டு வந்த மக்கள் நடத்திமுடித்தனர். தோழர். ஷ்யாமின் இறுதி ஊர்வலம் கரீம்நகர் மாவட்டத்தில் அவரது சொந்த ஊரில் நடத்தப்பட்டது. இறுதி ஊர்வலத்தில் தோழர்கள் கத்தார், வரவரராவ் உட்பட ஆயிரக்கணக்கான உழைக்கும் மக்கள், அறிவுஜீவிகள், மனிதஉரிமை ஆர்வலர்கள் மற்றும் பிற இயக்கத்தினர் கலந்து கொண்டனர். ஊர்வலத்தில் தோழர். கத்தார் புரட்சிகர பாடல்களை முழங்கினார். 'மக்கள் யுத்தம் நீடூழி வாழ்க' தோழர்களின் படுகொலைக்கு பழிதீர்ப்போம் மோதல்கள் அனைத்தும் காவல்துறையின் படுகொலைகளே போன்ற மக்கள் எழுப்பிய முழக்கங்கள் விண்ணைக் கிழித்தன. கிராமத்தில் ஆயிரக்கணக்கில் குவிக்கப்பட்டிருந்த காவல்துறை கூலிப்படை, உணர்ச்சி பெருக்குற்ற மக்கள் வெள்ளத்தைக் கண்டு அலறி அடித்து ஊரைவிட்டே ஓடிவிட்டது. காலை 10மணிக்கு துவங்கிய இறுதி ஊர்வலம் மாலை 5மணிக்கு 2கிலோமீட்டர் தொலைவில் இருந்த எரியூட்டம் இடத்தை அடைந்தது. மக்கள் வெள்ளத்தின் கண்ணீர் பெருக்கோடு தோழரின் உடல் எரியூட்டப்பட்டது. உயர்நீதிமன்ற ஆணைப்படி மறுபிரேத பரிசோதனைக்குப் பின்னர் தோழர். மகேஷின் உடல் டிசம்பர் 9 ஆம் நாளன்று வாரங்கல் மாவட்டத்தில் அவரது சொந்த ஊரான கூடவேந்திக்குக் கொண்டு வரப்பட்டது. தோழர்கள் கத்தார், வரவராவ், ஆந்திர மனித உரிமைக்கழகத்தலைவர். இரத்தினமாலா, காலோஜி நாராயணராவ் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்கள் இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். காலை 10மணி அளவில் துவங்கப்பட்ட இறுதி ஊர்வலம், மாலை சுமார் 4 மணி அளவில் எரியூட்டம் இடத்தை அடைந்தது. தோழர். கத்தாரின் புரட்சிகரப்பாடல்கள், மக்களின் புரட்சிகர முழக்கங்களுடன் தோழர். மகேஷின் உடல் எரியூட்டப்பட்டது. ஏற்கெனவே தோழர். ஷ்யாமின் இறுதி ஊர்வலத்தில் ஏற்பட்ட அனுபவத்தால் கிலிபிடித்துப் போயிருந்த காக்கிசட்டைசூரர்கள் இம்முறை எட்டிக்கூட பார்க்கவில்லை. தோழர். முரளியின் இறுதி ஊர்வலம் அவரது சொந்த ஊரான ஜகத்யாலில் நடத்தப்பட்டது. இதிலும் ஆயிரக்கணக்கான மக்கள் பங்கெடுத்து தங்களின் அருமைத் தோழனுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதுடன், அவரது கனவை நனவாக்க சூளுரைத்தனர். தியாகி தோழர்கள். ஷ்யாம், மகேஷ், முரளி மறையவில்லை. கோடானுகோடி உழைக்கும் மக்களின் இதயங்களில் நிறைந்துவிட்டனர்.



படிப்பகம்

www.padippakam.com

இறந்த உடலாகத்தான் பார்த்தனர்.

இம்மூன்று தோழர்களும் புரட்சிகர இயக்கத்தின் ஆணி வேராகத் திகழ்ந்தார்கள் என்றால் மிகையாகாது. மக்களின் விடுதலைக்காக அயராது பாடுபட்டவர்கள். எண்ணற்ற தலைமைத் தோழர்கள் ஆட்சியாளர்களின் இரத்தவெறிக்கு பலியான போதும், எவ்வித தயக்கமும் இன்றி பொறுப்புகளை தங்களது தோள்களில் சுமந்து இயக்கத்தை முன்கொண்டு சென்றவர்கள். "கம்யூனிஸ்ட்டின் தலைமைப் பண்பு என்பது மக்களுக்கு பணியாற்றுவதும், அவர்களுடன் இரண்டறக் கலந்து வளர்த்தெடுப்பதுமே" என்பதை நடைமுறையில் நிரூபித்தவர்கள். மாவோ கூறியது போல, கடினமான வேலை களை தாங்கள் எடுத்துக் கொண்டு எளிய வேலைகளை பிற தோழர்களுக்கு கொடுத்த ஒப்பற்ற கம்யூனிஸ்டுகள். தங்களின் இறுதி மூச்சு வரை மக்களை நேசித்தவர்கள் இன்று மக்களின் இதயங்களில் ஜோதியாகக் கலந்துவிட்டனர். புரட்சிகர இயக்கத்தின் வரலாற்றை மக்களுடன் சேர்ந்து படைத்தவர்கள் இன்று வரலாறாக ஆகிவிட்டனர்.

'தோழர்களையும்' பிற புரட்சியாளர்களையும், கொலை செய்வதன் மூலம் புரட்சிகர இயக்கத்தை வேரோடு பிடுங்கி விடலாம் என சந்திரபாபு-தோரா கும்பல் பகற்கனவு காண்கின்றது. இக் கொலைகாரர்களால் புரட்சியாளர்களைக் கொல்லத்தான் முடியும். ஆனால் மக்களின் இதயங்களில், இரத்தத்தில் கலந்து விட்ட புரட்சியாளர்களை, புரட்சிகர இயக்கத்தை நெருங்கவும் முடியாது. நாடு முழுவதும் ஆயிரமாயிரம் ஷ்யாம்களும், மகேஷ்களும், முரளிகளும் உதித்தெழுவது நிச்சயம். அப்பொழுது சந்திரபாபுகளும், தோராகளும் தாங்கள் செய்த ஒவ்வொரு கொலைக்கும் பதில் சொல்லியே தீர வேண்டும். அக்காலம் தொலைவில் இல்லை.

— கண்ணாமணி

**ஆந்திர பாசிச சந்திரபாபு நாயுடு அரசால் படுகொலை செய்யப்பட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்–லெனினிஸ்ட்) மக்கள் யுத்தத்தின் மையகுழு உறுப்பினர்கள் தியாகி தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி ஆகியோருக்கு முன்னோடி சிவப்பு அஞ்சலி செலுத்துகிறது.**

# தினமணி: பாசிசம் கோரும் "சனநாயகவாதி"

'நடுநிலை', 'உள்ளதை உள்ளபடி கூறுவது', 'பத்திரிக்கை தர்மம் காப்பது', என மூச்சுக்கு முன்னூறுதரம் முழங்கும் முதலாளிய பத்திரிக்கைகள் அனைத்தும், தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி ஆகியோர் நாயுடு அரசால் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நாடு முழுவதும் நடக்கும் குறிப்பாக ஆந்திராவில் நடக்கும் மக்கள் போராட்டங்களையும், புரட்சிகர இயக்கங்களின் எதிர்நடவடிக்கைகளையும் கண்டு வாயில் வயிற்றில் அடித்துக் கொண்டு அலறுகின்றன. புரட்சிகர இயக்கத்தை 'எப்படியாவது' ஒழித்துக் கட்டுமாறு மைய, மாநில அரசுகளிடம் மன்றாடுகின்றன. 'நடுநிலை காக்கும் ஏடு' என்று தன்னை பிரகடனப்படுத்திக்கொள்ளும் தினமணி கடந்த 18-12-99 அன்று 'காட்டுமிராண்டித்தனத்துக்கு முற்றுப்புள்ளி' என்ற தலைப்பில் தலையங்கம் எழுதியுள்ளது. அதில் போலீஸ் நடவடிக்கை(?)யில் நான்கு தீவிரவாதிகள் மரணமடைந்ததாகவும், அதனை கண்டித்து நக்சல்பாரிகள் வெறியாட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகவும் கூறியுள்ளது. மக்கள் போராட்டங்களையும், புரட்சிகர இயக்கங்களின் போராட்டங்களையும் வெறிச்செயல் என அழைக்கும் தினமணி, தோழர்களைக் கடத்திச் சென்று சித்திரவதை செய்து கொலை செய்த காவல்துறையின் குரூரத்தை 'போலீஸ் நடவடிக்கை' எனக் கூறுகிறது. தினமணியின் அகராதியில் காவல்துறை செய்யும் சித்திரவதைக்கும், கொலைக்கும் பெயர் நடவடிக்கை!

மக்கள் இரத்தம் குடிக்கும் அரசியல்வாதிகள், பணமுதலைகள் மீது சிறுதுரும்பு பட்டுவிட்டாலே 'காட்டுமிராண்டித்தனம்' என அலறும் தினமணிக்கு தோழர்கள் சித்திரவதை செய்யப்பட்டதற்கும், போலி மோதலில் படுகொலை செய்யப்பட்டதற்கும் காட்டப்பட்ட எண்ணற்ற ஆதாரங்களை திரும்பிப் பார்க்கவும் நேரமில்லை. வாழ்க தினமணியின் 'நடுநிலைமை!'

அடுத்ததாக, 'வன்முறைச் சித்தாந்தம் நமது மண்ணின் பாரம்பரியத்திற்கு விரோதமானது. எனவே புரட்சியாளர்களை ஒடுக்கவேண்டும்' என்கிறது தினமணி. மன்னராட்சி காலந்தொட்டு இன்றைய முதலாளிகளின் ஆட்சி வரை ஆளும் வர்க்கங்களின் வெறியாட்டத்தில் கோடானுகோடி உழைக்கும் மக்கள் சிந்திய இரத்த வரலாறைக் கொண்டது தான் நமது மண்ணின் பாரம்பரியம். இந்திராவின் அவசரநிலை காலத்தில் ஆயிரக்கணக்கானோர் படுகொலை, இந்திரா கொலையுண்ட போது ஆயிரமாயிரம் சீக்கியர்கள் படுகொலை, பாபர்மசூதியை இடித்து காவிக்கூட்டம் நடத்திய கணக்கற்ற இசுலாமியர் படுகொலை, பாலியல் பலாத்காரம், காஷ்மீரில் கடந்த பத்தாண்டுகளில் மட்டும் 60,000க்கும் மேற்பட்டோர் படுகொலை, பீகாரில் ஆதிக்கசாதி இரண்வீர் சேனாவின் நரவேட்டையில் நூற்றுக்கணக்கான தலித் மக்கள் படுகொலை, தமிழின விரோதி கருணாநிதியின் அரசால் நடத்தப்பட்ட மாஞ்சோலை தொழிலாளர் படுகொலை, சிறைக்குள் நிகழ்த்தப்பட்ட சிறைக்கைதிகள் படுகொலை – என நீண்டு கொண்டே செல்லும் கொலைப்பட்டியலைக் கொண்டது தான் பாராளுமன்ற சனநாயகத்தின்(!) பாரம்பரியம். இக்கொலைப்பட்டியலால் திருப்தி அடையாத தினமணி பாசிச படுகொலைகளை அதிகரிக்குமாறு அரசைக் கோருகிறது. மக்களின் புரட்சிகர காட்டுமிராண்டித்தனத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க மனிதநேய பாசிசத்தை மேற்கொள்ளுமாறு வேண்டுகிறது. ஆனால் மக்களின் 'காட்டுமிராண்டித்தனத்திற்கு' முன்னால் ஆளும் வர்க்கங்களின் 'கம்ப்யூட்டர் சனநாயகம்' தவிடுபொடியாகப் போவது நிச்சயம் என்பதை தினமணிக்கு நினைவுறுத்துகிறோம்.



படிப்பகம்

www.padippakam.com

## ஆளும் வர்க்கங்களை கலங்கடிக்கும் புரட்சிகர எதிர்ப்பு போராட்டங்கள்

மக்கள் யுத்தம் நடத்தி வரும் புரட்சிகர யுத்தத்துக்கு மக்களின் ஆதரவு இல்லை என பொய் பிரச்சாரம் செய்து வந்த வாஜ்பாய்-நாயுடு கும்பலும், முதலாளிய பத்திரிக்கைகளும், தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முராளி படுகொலைகளுக்கு எதிரான மக்கள் போராட்டங்களையும் புரட்சிகர இயக்கத்தின் பதிலடியையும் கண்டு கிலிபிடித்து போயுள்ளன. தோழர்கள் காவல்துறை கோழைகளால் சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்ட உண்மையை வெளிக் கொணர தோழர். மகேஷின் தாயார் மறுபிரேத பரிசோதனை கோரி உயர்நீதி மன்றத்தில் மனுதாக்கல் செய்தார். இதைக் கேள்விபட்ட காவல்துறை உயர் அதிகாரி தோரா கும்பல், தோழர். மகேஷின் உடலை உடனடியாக எரித்து விட முயன்றது. ஆனால் தோழர். கத்தர், தோழர். வரவரராவ் தலைமையில் திரண்ட மக்கள் தோழர். மகேஷின் உடலை காவல்துறையினர் எடுத்துச் செல்லவிடாமல் போராடினர். மக்கள் எதிர்ப்பைக் கண்ட காக்கிச்சட்டை பட்டாளம் மிரண்டு ஓடிவிட்டது. அத்துடன் தோழர்களின் இறுதி ஊர்வலத்தில் ஆயிரக்கணக்கான மக்கள் காவல்துறையினரின் தடைகளையும் தாண்டி அணிதிரண்டு வந்து தங்களின் தலைப்புதல்வர்களுக்கு இறுதி அஞ்சலி செலுத்தியதன் மூலம் சந்திரபாபுவின் முகத்தில் கரியைப்பூசினர்.

தோழர்களின் படுகொலைக்கு எதிர்ப்பு தெரிவித்தும், நீதிவிசாரணை கோரியும், டிசம்பர் 8 முதல் 14 வரை கண்டன வாரமாகவும், டிசம்பர் 15, 16 நாட்களை பொதுவேலை நிறுத்த நாட்களாகவும் கடைபிடிக்குமாறு மக்கள் யுத்தத்தின் மையக்குழு மக்களுக்கு அறைகூவல் விடுத்திருந்தது. அதன்படி நாடு முழுவதும் கண்டன வாரம் கடைபிடிக்கப்பட்டதுடன், கண்டன கூட்டங்களும், ஆர்ப்பாட்டங்களும் நடத்தப்பட்டன. குறிப்பாக ஆந்திர பிரதேசத்தில் எதிர்ப்பு போராட்டமானது புதிய பரிமாணத்தை எட்டியது. மக்கள் பணத்தை கோடிகோடியாக சுரண்டிக் கொழுக்கும் அரசியல்வாதிகள், அதிகாரிகளின் சொத்துக்கள் தாக்குதலுக்கு இலக்காயின. எதிர்ப்பு போராட்டத்தின் உச்சகட்டமாக டிசம்பர் 15, 16 ஆகிய நாட்களில் கடைபிடிக்கப்பட்ட பொது வேலைநிறுத்தம் முழுவெற்றி அடைந்தது. பொதுவேலைநிறுத்தம் முழுவெற்றி அடைந்ததையும், அதில் மக்களின் உணர்வு பூர்வமான பங்கேற்பையும் முதலாளிய பத்திரிக்கைகளே வேறு வழியின்றி ஒப்புக் கொண்டன. குறிப்பாக தெலுங்கானா மாவட்டங்களில் 2 நாட்களும் பேருந்துகள் நிறுத்தி வைக்கப்பட்டன. கடைகள், தனியார் நிறுவனங்கள் திரையரங்குகள் அடைக்கப்பட்டன. கடைகளை திறக்கவில்லை எனில் கைது செய்யப் போவதாகவும், அவர்களின் கடை உரிமையை பறிமுதல் செய்யப் போவதாகவும் வியாபாரிகளை மிரட்டிய காவல்துறையினர், வியாபாரிகள் காட்டிய எதிர்ப்பைக் கண்டு மிரண்டு பின்வாங்கினர். பள்ளிகள், வங்கிகள், அஞ்சல் நிலையங்கள் கூட இழுத்து மூடப்பட்டன. டிசம்பர் 16 அன்று போலி மோதல் படுகொலைகளை நிறுத்தக்கோரியும், கொலைகளுக்கு நீதிவிசாரணைகோரியும், ஆந்திராவின் பல்வேறு பகுதிகளில் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் தோழர்கள் கத்தர், வரவரராவ் உட்பட எண்ணற்றோர் கைது செய்யப்பட்டனர். தலைமைத் தோழர்களை கொன்றுவிட்டதால் புரட்சிகர இயக்கத்தை ஒடுக்கிவிட்டதாக பகற்கனவு கண்ட நாயுடு-தோரா கும்பல் இனி நிம்மதியாக தூங்கக்கூட முடியாது என்பதை இப்போராட்டங்கள் நிரூபித்து விட்டன.

## மதுரை தனபாண்டியன் பாலிடெக்னிக் நிர்வாகத்தின் அராஜகத்தைக் கண்டித்து மாணவர்கள் போராட்டம்

மதுரையில் உள்ள தனபாண்டியன் தனியார் பாலிடெக்னிக் சபாநாயகர் பி.டி.ஆர். பழனிவேல்ராஜனின் பினாமியினுடையது. மாணவர்கள் எண்ணிக்கைகேற்ப கல்லூரியில் தொழில் நுட்ப சாதனங்கள் இல்லாமல் போனாலும் `நன்கொடை' என்ற பெயரில் அடிக்கும் பகல் கொள்ளைக்கு மட்டும் போட்டிபோடும் சுயநிதி கல்லூரிகளில் ஒன்றுதான் பினாமி தனபாண்டியன் நடத்தும் இக்கல்லூரி. கடந்த டிசம்பர் இறுதிவாக்கில் இக்கல்லூரி மாணவர்கள் தங்களின் சனநாயக கோரிக்கைகளான மாணவர் பேரவைத் தேர்தல் நடத்தக் கோரியும், தேர்வுக் கட்டணத்திற்கு தாமதக் கட்டணம் என்ற பெயரில் மாணவர்களிடம் பணம் பறிப்பதை எதிர்த்தும், மாணவர்களை கேவலமாக திட்டுவதையும், மாணவர்களிடம் "நான் சி.பி.எம். லீலாவதி கொலையில் சம்பந்தப்பட்டவன், அதில் நான் மட்டும் தான் வெளியே இருக்கிறேன், உங்களையும் அதுபோல் செய்துவிடுவேன்" என்று தனிப்பட்ட முறையில் மிரட்டுவதை வாடிக்கையாக கொண்டிருந்த சங்கர் என்ற ஆசிரியரை நீக்கக் கோரியும், கேன்டினை சீர் செய்யக்கோரியும், மாணவர்களின் சொந்த பேருந்தில் மாணவர்கள் மட்டுமே அமர வேண்டும். மற்ற ஊழியர்களுக்கு தனி பேருந்து விட வேண்டும் எனக் கோரியும் மூன்று நாள் போராட்டம் நடந்தது. முதல் நாள் வகுப்பை புறக்கணித்து வெளியேறிய மாணவர்கள் ஒருங்கிணையாததன் விளைவாக வீட்டிற்கு சென்று விட்டனர். இரண்டாம் நாள் போராட்டத்தை பற்றி மாணவர்கள் கலந்து பேசி, வகுப்பை புறக்கணித்து வெளியேறி கல்லூரி நிர்வாகத்திற்கு கோரிக்கை மனு அளிப்பது என முடிவு செய்யப்பட்டது. மாணவர்களை அணிதிரட்டச் சென்ற மாணவத் தலைவர்களை கல்லூரி நிர்வாகத்தினர் வகுப்பறைக்குள் வைத்து சிறைபோல் பூட்டி விட்டனர். அதை மீறி வெளியேறிய மாணவர்களை தடுத்து நிறுத்தவும், மிரட்டவும் செய்தனர். அன்று மாலை மாணவத் தலைவர்களின் வீடுகளுக்கு நிர்வாகத்தரப்பில் அடியாட்களை அனுப்பி மிரட்டச் செய்தனர். கல்லூரி நிர்வாகத்தின் இத்தகைய சனநாயக மறுப்பை கண்டித்தும் மற்ற கோரிக்கைகளை இணைத்தும், சாலை மறியல் செய்ய மாணவர்கள் முடிவு செய்தனர். சாலை மறியல் செய்ய முயன்ற போது கூலிபட்டாளம் போலீசோ நிர்வாகத்திற்கு ஆதரவாக கையில் லத்தியுடன் தடியடி நடத்தப் போவதாக மிரட்டியது. இறுதியில் தாசில்தார் முன்னிலையில் நடந்த பேச்சுவார்த்தையில் கல்லூரி பேரவைத் தேர்தலை மட்டும் ஏற்றுக் கொள்ளாமல் மற்ற கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டனர். மாணவர்கள் ஒன்று திரண்டு போராடினால் அராஜக சுயநிதி கல்லூரி நிர்வாகங்களையும் அடிபணியச் செய்ய முடியும் என்பதற்கு இப்போராட்டமே சிறந்த சான்று.

—மு.மா.ச. மதுரை.



படிப்பகம்

www.padippakam.com

(23ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால் சிறைக்குள் எப்படி இவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டதற்காக குற்றம்சாட்டி கைது செய்து அடைத்தவர்களுக்கு எதிராக சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபடலாம் என்ற கேள்வியை எந்த பத்திரிகையும் எழுப்பவில்லை. சிறை அதிரிகாரிகள் எப்படி உள்ளே துப்பாக்கிச் சூட்டை நடத்தலாம், எந்த சட்டம் அதற்கு அனுமதிக்கிறது என்ற வினாவை எழுப்பவில்லை. துப்பாக்கி சூட்டை தவிர பிற வழிகளை ஏன் மேற்கொள்ள முடியாது என்ற சந்தேகத்தை எழுப்பவில்லை. ஆனால் சிறைவாசிகளை கொலைகாரர்களாய், கொள்ளைகாரர் களாய், ரவுடிகளாய், தாதாக்களாய் சித்தரிப்பதன் மூலம் அரசின் எல்லா சட்டவிரோத, மக்கள் விரோத நடவடிக்கை களையும் மூடி மறைக்க முயல்கின்றன.

சிறைக்கு வெளியேயும், சிறைக்கு உள்ளேயும் இன்றைக்கு தாதாக்களை, ரவுடிகளை கொலை கும்பல் களை உருவாக்கி ஊட்டி வளர்ப்பவர்கள் அரசும், காவல் துறையும், நீதிமன்றங்களுமாகத்தான் உள்ளன. கள்ளச் சாராயம், விபச்சாரம், போதைப்பொருள், போலி பொருட் கள் தயாரிப்பு, கொலை, கொள்ளை போன்ற எல்லா விதமான சமூக விரோத செயல்களையும் தூண்டிவிட்டு ஊக்குவித்து பெரும் பணம் பண்ணக்கூடிய துறையாக காவல்துறைதான் உள்ளது. அதுபோல சிறைக்குள்ளும் இத்தகைய அனைத்து நடவடிக்கைகளையும் மேற் கொண்டு பெரும்பணம் பண்ணுபவர்களாக சிறைத்துறை அதிகாரிகள் உள்ளனர். காபிபோசா, ஊழல் போன்ற வழக்குகளில் கைதாகி சிறைக்கு வரும் ஜெயலலிதா, சசிகலா, திவாகரன் போன்ற ஊழல் பெருச்சாளிகளிடம் லட்சக்கணக்கில் லஞ்சம் வாங்கிக் கொண்டு குளிர்சாதனம் உட்பட சுகபோக வசதிகள் செய்து கொடுப்பதும், மனுப்போட்டு பார்க்க வரும் ஏழை எளியவர்களிடம் பணம் பிடுங்குவது, என பல வழிகளிலும் ஈடுபட்டு கொள்ளையடிக்கும் சிறைத்துறை இவற்றிற்கு துணையாக பல சிறைவாசிகளையும் பயன்படுத்திக் கொள்கின்றது.

சிறையில் சிறைவாசிகளுக்கு தரவேண்டிய உணவு, சுகாதாரம், மருத்துவம் ஆகிய அனைத்து விசயங்களிலும் பெரும் ஊழல் செய்து கொண்டுள்ளனர். 1000 பேர் இருக்கத் தக்க இடங்களில் 3000, 4000 பேரை அடைத்து ஆடுமாடு களை விட கேவலமாக நடத்திவருகின்றனர். சென்னை போன்ற சிறைகளில் 60%ற்கும் மேலாக விசாரணைக் கைதிகளே அடைக்கப்பட்டுள்ளனர். பல ஆண்டுகளாக விசாரணையே இன்றி சிறைக் கொட்டடியில் அவதியுறும் சிறைவாசிகள் எண்ணற்றோர். இவை பற்றி வாய்திறக்கவும் இந்த ஜனநாயகத் தூண்களுக்கு வக்கில்லை.

உண்மையில், கடந்த சில வருடங்களாக சிறையில் அரசால் மேற்கொள்ளப்படும் திட்டமிட்ட தாக்குதல் நடவடிக்கைகளும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் சிறைத்துறை மாற்றங்களும், கெடுபிடிகளும் நமக்கு சில விசயங்களை தெளிவாக்கிக் கொண்டு வருகின்றன. 1995ம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் சென்னை மத்திய சிறையி லிருந்து 9 விடுதலைப்புலிகள் தப்பிச் சென்றதைக் காரணம் காட்டி பிற சிறைவாசிகள் மீது கண்மூடித்தனமான தாக்கு தலைத் தொடுத்தனர். இவற்றில் சிறைத்துறை அதிகாரிகளே குண்டாந்தடிகளையும், இரும்பு கம்பிகளையும் கொண்டு சிறைவாசிகளை மிருகத்தனமாக தாக்கியதாக சிறப்பு நீதி மன்ற நீதிபதி ராதாகிருஷ்ணன் விசாரணை மேற்கொண்டு தன்னுடைய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். தாங்கள் தாங்கப்பட்டது குறித்து விசாரணையில் தெரிவிக்கக் கூடாதென கைதிகள் மிரட்டப்பட்டிருந்ததாகவும் அவர் குறிப்பிடுகிறார். அதன் பிறகுதான் தமிழகம் முழுவதுமுள்ள சிறைச்சாலைகளில் சிறைவாசிகளுடன், உறவினர்கள் சந்தித்து பேசுவதற்கு கடும் தடைகள் ஏற்படுத்தும் விதத்தில் கண்ணாடி தடுப்பரண்கள் அமைக்கப்படுகின்றன. சிறைக்குள் முழுநேரமும் சிறைவாசிகள் கொட்டடிக்குள் அடைக்கப்படுகின்றனர். சிறைக்கண்காணிப்பு என்ற பெயரில் கெடுபிடிகள் தீவிரப்படுத்தப்படுகின்றன. அரசியல் கைதிகள் தங்கள் வழக்கறிஞர்களிடம் பேசுவதுகூட ரகசியமாக பதிவு செய்யப்படுகின்றன. சிறைக்கூடங்கள் மேலும் சிறைவாசிகளை மிரட்டும் வண்ணம் பலப்படுத்தப்படுகின்றன. சமீப காலமாக சிறையில் உள்ள இசுலாமிய சிறைவாசிகள் தனிமைப்படுத்தப்பட்டு, கடும் கண்காணிப்பிற்கும், சித்திரவதைகளுக்கும், போலி குற்றச்சாட்டுகளுக்கும் உள்ளாக்கப்படுகிறார்கள். அவர்கள் குறித்த பொய்யான பய பீதிகளை சக சிறைவாசிகள் மத்தியிலும், சமூகத்திலும் ஏற்படுத்தி அவர்கள் மீது வெறுப்பு உமிழ வைக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் சிறைகளில் இருந்த புரட்சியாளர்கள், ஜனநாயக சக்திகள் தலைமையில் போராடி பெறப்பெற்ற சிறைவாசிகளின் நியாயமான உரிமைகள்கூட இன்று பறிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தாராளமயமாக்கல், உலகமயமாக்கல் ஆகியவற்றின் விளைவாக ஒட்டுமொத்த நாடும் பன்னாட்டு கம்பெனிகளின், உலகவர்த்தக அமைப்பு, உலக வங்கி ஆகியவற்றின் அடிமையாக மாற்றப்படும் சூழலில், பெருகிவரும் கதவடைப்புகள், வேலைவாய்ப்பின்மை, சமூக நெருக்கடிகள் ஆகியவற்றால் கிளம்பும் மக்கள் எழுச்சியையும், சமூக குற்றங்களையும் ஒடுக்குவதற்கான புதிய தேவைகளை நிறைவேற்றும் விதத்தில் சிறைகள் கட்டமைக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

கடந்த 1997ல் ஆந்திர சிறைச்சாலைகளில் உள்ள புரட்சியாளர்கள் தலைமையில் சிறைவாசிகள் போராட்டக் குழு கட்டப்பட்டு, அனைத்து சிறைகளும் ஒரே நேரத்தில் தங்களின் கோரிக்கைகளை நிறைவேற்றக்கோரி போராட் டத்தில் குதித்தனர். சிறைத்துறை மற்றும் ஆந்திர அரசின் கடும் அடக்குமுறையைத்தாண்டி அவ்வியக்கம் பிரம்மாண்ட மாக நடைபெற்றது. இறுதியில் சிறைப்போராட்டம் இந்திய வரலாறு காணாத பெரும் வெற்றி பெற்றது. அதற்கு முக்கிய காரணம் சிறைக்கு வெளியே மனித உரிமை இயக்கம், மற்றும்பிற வெகுஜன இயக்கங்கள் சிறைப்போராளி களுக்கு சாதகமாக துவங்கிய போராட்ட இயக்கம்தான். சட்டசபைக்கு முன்பு ஆர்பாட்டம், ஊர்வலங்கள், தர்ணாக் கள், பொதுக்கூட்டங்கள், கருத்தரங்குகள் என எடுக்கப் பட்ட எழுச்சிகரமான நடவடிக்கைகள் தான் அவ்வெற்றிக்கு முக்கிய காரணம். அதே போல் இன்றைக்கும் சிறைக்குள் நடக்கும் ஒவ்வொரு பிரச்சினைக்கும் சிறைக்கு வெளியே உணர்வுபூர்வமான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின் றன. அதே போல் இங்கும் நாம் சிறைக் கொடுமைகளுக்கு எதிராக வெளியே உடனடியாக கூட்டுப்போராட்ட இயக்கங் களை முன்னெடுக்க வேண்டும். அதுவரை இப்பிரச்சினை களுக்கு தீர்வு காண முடியாது.

—கணேசன்



படிப்பகம்

www.padippakam.com

## சென்னை சிறைவாசிகள் படுகொலை:

# கொலைகார கருணாநிதி அரசின் ரத்த வெறியாட்டம்!



வெறித் தாக்குதலுக்கு இலக்கான சிறை வாசிகள்

கடந்த நவம்பர் 17ம் நாள் சென்னை மத்திய சிறையில் சிறைவாசிகள் தங்களின் ஜனநாயக உரிமைகளுக்காக காவல்துறைக்கு எதிராக கடுமையான போராட்டத்தை நடத்தினர். அதன் தொடர்ச்சியாக 20க்கும் மேற்பட்ட சிறைவாசிகள் காவல்துறையால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர். 2 சிறை அதிகாரிகளும் இறந்துள்ளனர். இச்சம்பவம் குறித்து பத்திரிகைகளும், தொலைக்காட்சிகளும், 'பாக்சர் வடிவேலு செத்ததால் பிரச்சனை', 'கல்வீச்சு, அமளி, கட்டுப்படுத்த துப்பாக்கிச்சூடு,' 'சிறைவார்டரை கொளுத்தி கைதிகள் ஆவேசம்,' 'துணை ஜெயிலர் உயிரோடு எரிப்பு', என்பதான தலைப்புகளில் சூடான செய்திகளை வெளியிட்டன, கருணாநிதி அரசின் சட்டதுறை அமைச்சர் ஆலடி அருணா சிறை அதிகாரிகள், காவல்துறை அதிகாரிகள் எழுதிக் கொடுத்த அறிக்கைகளை தன் கையெழுத்திட்டு வாசித்தார். இவ்வறிக்கைகள் செய்திகளின் சாராம்சம், கைதிகள் தான் அங்கு நடைபெற்ற கலவரத்திற்கும், உயிரிழப்புகளுக்கும், நாசங்களுக்கும் முழுக் காரணமும், முழுப்பொறுப்பும் ஆகும் என்பதே. உண்மையில் கைதிகள் தான் இதற்கு காரணமான குற்றவாளிகளா? அப்படியே கைதிகள் போராடினாலும் அதை வன்முறையோ, உயிரிழப்போ இன்றி கட்டுக்குள் கொண்டுவருவது காவல் துறைக்கு சாத்தியமில்லாத விசயமா? சிறையையும், அதிகாரத்தையும் கைகளில் வைத்துக்கொண்டு ஒரு யுத்தத்திற்கு தயாரான நிலையில் முழுவதும் ஆயுதபாணிகளாய் இருப்பது காவல்துறையா? கைதிகளா?

மாற்றுச் செய்தி ஊடகங்களையும், சிறையை பற்றியும் அறிய முடியாத லட்சக்கணக்கான மக்கள் குழப்பத்தோடும், சந்தேகத்தோடும் அரசும், அரசின் ஏவல்நாய்களான பத்திரிக்கை மற்றும் தொலைக்காட்சிகளும் கட்டவிழ்த்து விட்ட பொய்ப்பிரச்சாரத்தை நம்பிக் கிடப்பவர்களாக ஆக்கப் பட்டார்கள்.

பாக்சர் வடிவேலு என்பவர் ஜெயலலிதா ஆட்சி காலத்தில் ஜெயலலிதா கும்பலால் தராசு பத்திரிக்கை அலுவலகம் தாக்கப்பட்ட வழக்கில் சம்பந்தப்பட்ட முக்கிய குற்றவாளியாக குற்றம்சாட்டப்பட்டவர். இவரை காவல் துறையினர் கடுமையாக சித்திரவதை செய்து அடித்தே கொன்றுள்ளனர்.

சிறையை பொறுத்தவரை சிறைவாசியின் நிலைமை என்பது சமூகத்துடனான அவனுடைய/அவளுடைய அனைத்து உறவுகளும் துண்டிக்கப்பட்டு, உயிர் வாழ்வதைத் தவிர ஏனைய உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்டு முடக்கப்பட்ட நிலைதான். அதிலும் தன் சக சிறைவாசி கொல்லப்படும் பொழுது அந்த உரிமையும் பறிக்கப்படுவதை அறிகிற மிக மோசமான நிலைமைக்கு தள்ளப்படுகிறான்.

எனவே பாக்சர் வடிவேலுவின் மரணம் குறித்து சிறைத் துறையிடம் சிறைவாசிகள் விசாரித்ததாகத் தெரிகிறது. விசாரித்த சிறைவாசிகளை அடித்து ஒடுக்க நினைத்த பொழுது, சிறைக்குள் போராடத் துவங்குகிறார்கள். கீழே போராடுவதற்கு வாய்ப்பற்ற சூழலில், சிறை மதில்கள் மற்றும் மரங்களில் சிறைவாசிகள் ஏறி நின்று கொண்டு போராடுவது வழக்கமான ஒன்று. இப்போராட்டத்தை நிறுத்த முறைப்படியான எந்த நடவடிக்கையிலும் சிறைத்துறை ஈடுபடவில்லை. நேரடியாக தடியடியையும், கொலை ஆயுதங்களை கொண்டு தாக்கவும், துப்பாக்கிச் சூடு நடத்தவும் துவங்கியுள்ளனர். கைதிகளும் தற்காப்பிற்கு எதிர்த்தாக்குதலில் ஈடுபட்டுள்ளனர்.

காயம்பட்டு கீழ்பாக்கம் மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட சிறைவாசிகளின் கூற்றுப்படி சிறைத்துறையே சிறை கண்காணிப்பாளர் தலைமையில் சட்டவிரோதமாக, சிறை சட்டங்களுக்கே முரணாக கடும் தாக்குதலை நடத்தி நிராயுதபாணிகளான சிறைவாசிகளை அடித்து ஒடுக்கியுள்ளனர்.

அதன் பிறகு வெளியிலிருந்து அதிரடிப்படை கொண்டு வரப்பட்டு இரண்டாம் கட்ட கொலை வெறித் தாக்குதலை தமிழக அரசு நேரடியாக நடத்தியுள்ளது. சிறைக்குள் புகுந்த அதிரடிப்படை கண்ணில் பட்டவர்களையெல்லாம் பிடித்துவைத்து சுட்டுக் கொன்றுள்ளது. நூற்றுக்கும் மேற்பட்டவர்களை கொடூரமாக தாக்கி படுகாயப்படுத்தியுள்ளது. இதன் மூலம் சிறைக்குள் சக மனிதன் எவன் செத்தாலும் அதற்காக மற்றவர்கள்முணுமுணுக்கக்கூட கூடாது என்ற மனநிலையை கொண்டு வருவதற்காகவே தமிழக அரசு இத்தகைய ஒரு நடவடிக்கையை திட்டமிட்டு நடத்தியுள்ளது.

அரசையும், அரசு நடவடிக்கைகளையும் பாதுகாக்கும் தூண்களில் ஒன்றான செய்தித் தொடர்பு சாதனங்களும் கைதிகள்தான் கலவரம் செய்தார்கள், நேர்மையான அதிகாரியை கொன்றார்கள், சிறைக்குள் தீ வைத்தார்கள்; இறந்தவர்கள் சாகடிக்கப்பட வேண்டிய குற்றவாளிகள் என்பது போன்ற பொருள்படும்படி செய்திகள் வெளியிட்டார்கள். இறந்த சிறைவாசிகளின் குடும்ப வேதனைகளை மூடி மறைத்துவிட்டு, சிறை அதிகாரிகள் குடும்பங்களை காட்டி அரசிற்கும் காவலர்களுக்கும் மக்களின் அனுதாபத்தை தேடித்தர முயன்றார்கள்.

( தொடர்ச்சி 22ம் பக்கம்)



படிப்பகம்

www.padippakam.com



# ஆந்திர அரசால் படுகொலை செய்யப்பட்ட இ.க.க (மா.லெ.) ம.யு. மையக்குழு உறுப்பினர்கள் தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி ஆகியோருக்கு வீரவணக்கங்கள்!



தோழர். ஷ்யாம்



தோழர். மகேஷ்



தோழர். முரளி

தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி - இப்பெயர்களைக் கேட்டாலே ஆளும்வர்க்கங்களும், காக்கிச்சட்டை கூலிப் பட்டாளமும் குலைநடுங்கும். இத்தோழர்கள் இந்திய ஆட்சியாளர்களுக்கு, குறிப்பாக ஏகாதிபத்திய எடுபிடி ஆந்திர சந்திர பாபு நாயுடு அரசிற்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவர்கள். கோடானுகோடி உழைக்கும் மக்களுக்கோ அவர்களின் தவப்புதல்வர்களாக வாழ்ந்தவர்கள். ஆயிரக்கணக்கான புரட்சியாளர்களுக்கோ மகத்தான தலைவர்களாக திகழ்ந்தவர்கள். நக்சல்பாரியின் வாரிசாகவும் இந்திய புரட்சியின் கலங்கரை விளக்காகவும் திகழும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) மக்கள் யுத்தத்தின் மையக்குழு உறுப்பினர்களும் ஆவர்.

இத்தகைய உன்னதமான தோழர்களை ஏகாதிபத்திய அடிவருடி சந்திரபாபு நாயுடுவின் காவல்துறை வெறிநாய்கள் டிசம்பர் 1ம் நாள் பெங்களூரில் கைது செய்து கொடூரமாக சித்திரவதை செய்து பின்னர் 2ந் தேதி காலை சுட்டுக் கொலை செய்துவிட்டு, உடல்களை கரீம்நகர் மாவட்டம், கொய்யூர் காட்டில் வீசிவிட்டனர். அதன் பிறகு டிசம்பர் 2ம் நாள் கொய்யூர் காட்டில் 30 பேர் அடங்கிய மக்கள் யுத்த கெரில்லா குழுவுக்கும், 18 பேர் கொண்ட காவல்துறையினருக்கும் 4 மணிநேரம் நடந்த துப்பாக்கிச் சண்டையில் மூன்று தோழர்களும், அருண் என்ற அடையாளம் தெரியாத கெரில்லாகுழு உறுப்பினரும் கொல்லப்பட்டதாக காவல்துறை அதிகாரி தோரா எழுதிய 'திரைக்கதை' பத்திரிக்கை செய்தியாக வெளிவந்தது. ஆனால் தோராவின் இக்கதையை சிந்திக்கத் தெரிந்த எவரும் நம்பமாட்டார்கள். நான்கு மணி நேரம் நடந்ததாகக் கூறப்படும் இந்த துப்பாக்கி சண்டையின் சத்தம் அருகாமையிலுள்ள கிராம மக்களுக்கோ, ஒரு கிலோ மீட்டர் தூரத்தில் சாலையில் சென்றவர்களுக்கோ கேட்காதது வேடிக்கையாகும். அத்துடன் இச்சண்டையில் காவல்துறையைச் சேர்ந்த யாருக்கும் சிறு காயம் கூட ஏற்படவில்லை. அதேவேளை மக்கள் யுத்த மையக் குழு உறுப்பினர்கள் மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர். கொலை செய்வதில் மட்டுமே தேர்ச்சி பெற்ற தோராவிற்கு கதை புனைவதில் இன்னும் பயிற்சி தேவைப்படுகிறது. இவை எல்லாவற்றிற்கும் மேலாக, 'மோதலில்' அருண் என்ற அடையாளம் தெரியாத கெரில்லா குழு உறுப்பினர் மையக்குழு தோழர்களுடன் கொல்லப்பட்டதாக தோரா அறிவித்தான். அடையாளம் தெரியாத அந்த கெரில்லாகுழு உறுப்பினரின் பெயர் மட்டும் தோராவுக்கு எப்படி தெரிந்தது என்பது நாயுடுவும், தோராவுக்கும் மட்டுமே வெளிச்சம் (மோதலில் இறப்பதற்கு முன்னர் தனது பெயரை மட்டும் தோராவின் காதில் கூறிவிட்டார் போலும்!) உண்மையில் நடந்தது மிகவும் கொடூரமானது. அந்த அடையாளம் தெரியாத அருண் என்ற இளைஞர் ஆந்திராவில் கிராமபுறத்தில் மாடு மேய்த்துக் கொண்டிருந்த இளைஞர் ஆவார். அவரை பிடித்துச் சென்று சுட்டுக் கொன்று, உடலுக்கு பச்சை நிற சீருடை அணிவித்து மூன்று தோழர்களின் உடல்களுக்கு அருகே போட்டுவிட்டு, மோதலில் இறந்து விட்டதாக கதை விடுகிறான் தோரா. இதுதான் சந்திரபாபு - தோரா கும்பலின் வீரம்!

## உண்மையில் நடந்தது என்ன?

இன்று நாடு முழுவதும், குறிப்பாக ஆந்திரா, பீகார், தண்டகாரண்யாவில் முன்னேறி வரும் புரட்சிகர மக்கள் யுத்தத்தை ஒழித்திட வாஜ்பாய் - சந்திரபாபு பாசிச கும்பல் முயற்சித்து வருகிறது. அதற்காக கிரே ஹவுண்ட்ஸ் (வேட்டை நாய் பிரிவு) சிறப்பு புலனாய்வுதுறை போன்ற பல்வேறு கொலைகார காவல்துறை பிரிவுகளை ஏவி, கட்சிக்குள் ஓடுகாலிகளுக்கு பணம் கொடுத்து தலைமைத் தோழர்கள் பற்றிய தகவல்களை திரட்டி அதன் மூலம் போலிமோதல் படுகொலைகளை அரங்கேற்றி வருகிறது இக்கும்பல். இக்கோ[illegible]களின் இத்தகைய இழிவான தந்திரத்திற்கு பலியாகி தியாகிகளான[illegible]கள் தான் தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி ஆவர். ஆந்திரா மற்[illegible]ம் வடதெலுங்கானா இயக்கங்களின் ஒருங்கிணைப்பில் உள்ள சி[illegible]ல்கள் பற்றி விவாதிப்பதற்காக டிசம்பர் 1 ஆம் நாளன்று பெங்களூரில் தோழர்கள் ஷ்யாம், மகேஷ், முரளி சந்தித்தனர். அவர்களது சந்திப்பு குறித்து முன்னதாக தகவல் அறிந்த கோவிந்த ரெட்டி என்ற ஓடுகாலி காவல்துறைக்கு முன்னதாக தகவல் தெரிவித்து விட்டான். தயாராக இருந்த காக்கிசட்டை பட்டாளம், தோழர்களை தங்குமிடத்தில் இருந்து கைது செய்து ஹெலிகாப்டர் மூலம் ஹைதராபாத் கொண்டு சென்று கொடூரமாக சித்திரவதை செய்து பின்னர் சுட்டுக் கொன்று உடல்களை காட்டில் வீசிவிட்டது. இவ்வாறு கோழைத்தனமான முறையில் படுகொலைகளைச் செய்துவிட்டு மோதலில் மையக்குழு உறுப்பினர்களைக் கொன்றுவிட்டதாக மார்தட்டிக் கொள்கிறான் தோரா. பாசிச காட்டாட்சி நடத்துவதில் ஹிட்லரையும், முசோலினியையும், பெருவின் பிஜிமோரியையும் கூட பின்னுக்குத் தள்ளிவிட்டான் ஏகாதிபத்திய எடுபிடி சந்திரபாபு நாயுடு. நாஜி ஆட்சிக்காலத்தில் கூட ஜூலியஸ் பூசிக் போன்ற கம்யூனிசத் தலைவர்களை இராணுவ நீதிமன்றத்தில் பெயரளவு விசாரணை நடத்தி தூக்கிலிட்டான் ஹிட்லர். அமெரிக்க ஏஜெண்டான பெருவின் சர்வாதிகாரி பிஜிமோரி கூட பெரு கம்யூனிஸ்ட் கட்சி தலைவர்களான தோழர்கள் கன்சாலோ, .:பெலிசியானோ ஆகியோரை கைது செய்து சிறையிலடைத்துள்ளான். சர்வாதிகார துருக்கி அரசு கூட தேசிய இன போராளி அப்துல்லா ஒசலானை கைது செய்து வழக்கு நடத்தி வருகிறது. ஆனால் உலகிலேயே 'மிகப்பெரிய ஜனநாயக நாடு' என பீற்றிக் கொள்ளும் இந்தியாவில் எவ்வித தங்குதடையின்றி புரட்சியாளர்கள், ஆதரவாளர்கள், மாணவர்கள், பெண்கள், மனித உரிமை ஆர்வலர்கள், போராடும் உழைக்கும் மக்கள் என அனைத்து தரப்பினரையும் நூற்றுக்கணக்கில் கொன்று குவித்து வருகிறது நாயுடு-தோரா பாசிச கும்பல். படுகொலைகளை அரங்கேற்றுவதற்கென்றே கொலைகார சிறப்பு காவல்துறை பிரிவுகளையும், கிரிமினல் குழுக்களையும் உருவாக்கி அங்கீகரிக்கப்பட்ட கொலைகாரர்களாக உலாவவிட்டுள்ளான் சந்திரபாபு நாயுடு. ஊரறிந்த ஊழல் பெருச்சாளி இராசீவ் பெயரை குற்றப்பத்திரிக்கையிலிருந்து நீக்குவது குறித்து மண்டையை உடைத்து கொள்ளும் மாண்புமிகு நீதிபதிகள் இப்படுகொலைகளை திரும்பிக்கூட பார்ப்பதில்லை. மாறாக, செய்யும் கொலைகளின் எண்ணிக்கைக்கேற்ப கொலைகார காக்கிச்சட்டை கயவர்களுக்கு பதவி உயர்வும், பதக்கமும் வழங்கப்படுகிறது.

(19–ம் பக்கம் பார்க்க)

படிப்பகம்